வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 20.12.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 11 | பக்கங்கள் : 16



# ஓ. எம். பி. விசாரணையை எதிர்த்து முல்லைத்தீவில் பெரும் போராட்டம்!

## போராட்டக்காரர்கள் கச்சேரிக்குள் நுழைந்ததால் பதற்றம்

முல்லைத்தீவு, டிசெ. 20
காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பதிவுக்காக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு சென்ற 'காணாமல் போனோருக்கான அலுவலக' (ஓ. எம். பி.) அதிகாரிகளை மறித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும், போராட்டக்காரர்களின் எதிர்ப்பை மீறி மாற்று பாதையால் மாவட்ட செயலகத்துக்குள் நுழைந்து காணாமல் போனோருக்கான அலுவலக அதிகாரிகள் விசாரணைகளை நடத்தினர். இந்நிலையில், திடீரென செயலகத்துக்குள் நுழைந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 15

# தீர்வு முயற்சிகளை நான் பாதுகாப்பேன்

## சம்பந்தனிடம் சொல்ஹெய்ம் உறுதி

**கொழும்பு, டிசெம்பர் 20**
**இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளை பாதுகாப்பதற்கு தேவையான அனைத்தையும் மேற்கொள்வேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் உறுதியளித்துள்ளார் எரிக் சொல்ஹெய்ம்.**

சர்வதேச காலநிலை தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் நோர்வேயின் முன்னாள் விசேட தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் நேற்று 15



## போதையில் மனைவியை அடித்து கொன்ற கணவன்!

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு, டிசெ. 20
ஒன்றாக மது அருந்திய தம்பதியரிடையே ஏற்பட்ட முரண்பாட்டில் மனைவியை மண்வெட்டி பிடியால் அடித்து கணவர் கொலை செய்துள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு - கரடியனாறில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த 15

## 104 ரொஹிங்கியர்களும் யாழ்ப்பாணம் சிறையில்!

யாழ்ப்பாணம், டிசெ. 20
வடமராட்சி கிழக்கு கடலில் 104 ரொஹிங்கிய அகதிகளுடன் தத்தளித்த படகிலிருந்து மீட்கப்பட்ட 104 ரொஹிங்கியர்களும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை கடற்படை முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த இந்த அகதிகள் இரு பேருந்துகளில் ஏற்றப்பட்டு நேற்றிரவு 8 மணியளவில் 15



## யாழில் பாண் விலை ரூ. 10 குறைந்தது!

யாழ்ப்பாணம், டிசெ. 20
நள்ளிரவு முதல் பாணின் விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு இறாத்தல் (450 கிராம்) பாணின் விலை 190 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று யாழ் மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம், யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் என்பன கூட்டாகத் தெரிவித்துள்ளன.

சனிக்கிழமை முதல் ஒரு 15

## ரூ. 500 கோடி சீருடை அன்பளித்தது சீனா!

கொழும்பு, டிசெ. 20
நாட்டின் மாணவர் எண்ணிக்கையில் 70 சதவீதத்தினரின் சீருடை தேவையை பூர்த்தி செய்யும் வகையில் 500 கோடி ரூபாய் பெறுமதியான சீருடைகளை சீனா அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த நன்கொடையின் முதலாவது தொகுதியாக 3 மில்லியன் மீற்றர் சீருடை துணிகள் 38 ஆயிரம் பெட்டி களில் பொதியிடப்பட்டு , 20 கொள்கலன்களில் இலங்கைக்கு வருகின்றன என்று 15

## நான்கில் ஒருவருக்கு உணவில்லை! நிலைமை இன்னும் மோசமடையும்!!

### ஐ. நா. அமைப்பு எச்சரிக்கை

நியூயோர்க், டிசெ. 20
இலங்கை வேகமாக வளர்ந்து வரும் உணவுப் பாதுகாப்பு நெருக்கடியை எதிர்கொள்கிறது, மேலும் நான்கு பேரில் ஒருவர் ஏற்கனவே உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கிறார் - என்று ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்று அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம், "அரசியல் மற்றும் பொருளாதார எழுச்சியின் விளைவாக 2022இல் இலங்கையில் மனிதாபிமான தேவைகள் 15

## கே. கே. எஸ். - புதுச்சேரி இடையே ஜனவரியில் பயணிகள் கப்பல்!

### மீண்டும் உறுதி செய்தார் அமைச்சர் நிமால்!

கொழும்பு, டிசெ. 20
இந்தியா - இலங்கை இடையே அடுத்த மாதம் (ஜனவரி) பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. இது காங்கேசன்துறை துறைமுகத்தையும் - இந்தியாவின் புதுச்சேரியையும் இணைப்பதாக அமையும் என்று துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்த அவர்,

இந்த சேவைக்கு இந்திய அரசாங்கம் இணக்கம் 15

## கோட்டாபய ஆதரவாளரின் ஐ. நா. தூதுவர் பதவி பறிப்பு!

கொழும்பு, டிசெ. 20
முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆதரவாளரான சி. ஏ. சந்திரபிரேமவி ஐ. நா. வதிவிடப் பிரதிநிதி பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அவரின், இடத்துக்கு ஹிமாலி அருணதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர், ஹிமாலி அருணதிலகே நேபாளத்துக்கான இலங்கையின் தூதுவராகப் பணியாற்றியிருந்தார்.

உயர் பதவிகளுக்கான பாராளுமன்றக் 15

## இப்படியும் நடக்கிறது…!

உலகின் கவனத்தை கடந்த ஒரு மாதகாலமாக ஈர்த்து வைத்திருந்த உலகக் கிண்ண திருவிழா முடிவடைந்துவிட்டது.

ஞாயிறன்று நடைபெற்ற ஆர்ஜென்ரீனா - பிரான்ஸ் இறுதி யாட்டம் நடந்துகொண்டிருந்தபோது முகநூலில் நம்மவர்கள் சிலர் ஆர்ஜென்ரீனாவுக்காக துள்ளிக் குதித்துக்கொண்டிருந் தனர்.

ஆர்ஜென்ரீனாவின் நட்சத்திர வீரர் மெஸ்ஸியை மட்டும் முன்னிலைப்படுத்தி சிலர் பதிவிட்டுக்கொண்டிருந்தனர்.

விளையாட்டு என்று வந்துவிட்டால் அங்கே யார் திறமை யானவர்களோ அவர்கள் வெற்றியடைய வேண்டும் என்று நினைப்பதில தவறே இல்லை. அதற்காக பிரான்ஸ் வீரர்கள் சிறப்பாக விளையாடவில்லை என்பதல்ல. அவர்களே, மைதானத்தில் இருந்த பார்வையாளர்களை மாத்திரமல்ல, உலகம் எங்கும் தொலைக்காட்சிகளுக்கு முன்னால் இருந்த பலரையும் இருக்கை நுனியில் வைத்திருந்தவர்கள்.

விளையாட்டு என்றால் திறமையானவர்கள் வெற்றியடைய வேண்டும் என்பதும் அவர்களுக்காக - அவர்கள் வெற்றிபெற வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் ஒரு விளையாட்டு ரசிகனுக்கு இருக்கவேண்டியதுதான்.

ஆனால், நாம் அப்படி பழக்கப்பட்டவர்கள் இல்லையே. உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியும் இந்திய அணியும் விளையாடி, இந்திய அணி வெற்றி பெற்றபோது பட்டாசு கொழுத்தி கொண்டாடியவர்கள் யாழ்ப்பாணத்து கிரிக்கெட் ரசிகர்கள். இவர்கள் அவ்வாறு பட்டாசு கொழுதியது, இந்திய அணியின் திறமைக்கு மதிப்பளித்தோ அல்லது திறமையால் அவர்கள் வென்றார்கள் என்பதற்காகவோ அல்ல என்பது நமக்கு தெரிந்ததுதான்.

ஆர்ஜென்ரீனா - பிரான்ஸ் விளையாடிக் கொண்டிருந்த போது பலரும், ஆர்ஜென்ரீனா மண், சேகுவாரா என்ற சே பிறந்த மண் என்றும் மரடோனா பிறந்த மண் எனவும் அதற்காகவே அவர்கள் ஆர்ஜென்ரீனாவை ஆதரிப்பதாகவும் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்ததையும் காணமுடிந்தது.

நண்பர் சின்னையா ராஜேஸ்குமார் தனது முகநூலில் இது தொடர்பாக எழுதியுள்ள பதிவு ஒன்று இந்த ஊர்க்குருவின் கவனத்தைப் பெற்றிருந்தது.

'ஆர்ஜென்ரீனா சே பிறந்த மண். மரடோனா பிறந்த மண் எனவே ஆர்ஜென்ரீனா டீமுக்கு சப்போர்ட் என பலர் தெரி விப்பது ஆர்ஜென்ரீனாவின் நிறவாத வரலாற்றை தெரியாத நிலையிலிருந்தே எழுகிறதெனலாம்.

மற்றைய தென் அமெரிக்க நாடுகளை விடத் தாங்கள் உயர்ந்தவர்கள். ஏனெனில், ஆர்ஜென்ரீனியர் அனைவரும் ஐரோப்பிய குடியேறிகள் என்ற கதையாடல் ஆர்ஜென்ரீனியர் பலரிடம் ஊறிப்போன விடயம். ஸ்பானிய காலனித்துவத்தி டமிருந்து 19ஆம் நூற்றாண்டில் சுதந்திரமடைந்த பின்னர் ஐரோப்பியர்களை மட்டுமே குடியேற அனுமதிக்கும் சட்டம் அங்கு இருந்தது. அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்ட கறுப்பின மக்களின் அடையாளம் மறுக்கப்பட்டது. கறுப் பின மக்கள் காட்டுமிராண்டிகள். ஐரோப்பியர்கள் நாகரிகம் கொண்ட உயர்ந்த குடியினர் என்ற நிறவாத சிந்தனையிலேயே அரசு கட்டப்பட்டது.

எனவே, ஆர்ஜென்ரீனா அணிக்கு ஆதரவு என்பது உதை பந்து ஆட்டத்துள் இருந்து மட்டும் பார்க்கும் ஆதரவெனில் பிரச்னை இல்லை. முக்கியமாக சே ஒரு சர்வதேசவாதி. அவர் தன்னை ஆர்ஜென்ரீனியராக அடையாளப்படுத்தவில்லை. கியூபாவிலும் கொங்கோவிலும் பின்னர் பொலிவியாவிலும் போரிட்டவர். எனவே, அவரின் பெயரால் ஆர்ஜென்ரீனா வுக்கு ஆதரவு கொடுப்பதென்பது நியாயமற்றதும் அவரை சிறுமைப்படுத்துவதுமாகும்.' இதுதான் சின்னையா ராஜேஸ்குமாரின் வரிகள்.

சின்னையா எழுதுவதுபோல ஆர்ஜென்ரீனா நிறவாத சிந்தனை கொண்டது என்பதாலேயே அதன் வீரர்களில் ஒரு சிறுபான்மையினரை காணமுடியவில்லை. ஆனால், பிரான்ஸ் ரீம் அப்படியல்ல. அது ஓர் ஆபிரிக்க ரீம் போலவே காட்சி யளித்தது.

அதிகம் ஏன் அதன் நட்சத்திர வீரர் எம்பாப்பே ஓர் ஆபி ரிக்க வம்சாவளியிலிருந்து வந்தவர். போட்டியில் தோல்விய டைந்து மைதானத்தில் சோகத்துடன் அமர்ந்திருந்த அவரிடம் போய் தானும் அமர்ந்து ஆறுதல் கூறிய பிரெஞ்சு அதிபர் அவ ருக்கு ஆறுதல் கூறிய காட்சி பலரையும் பேச வைத்திருக்கின்றது.

போட்டியை பார்த்துக் கொண்டிருந்தபோது, ஆர்ஜென் ரீனா பற்றிய - அவர்களின் நிறவெறி பற்றிய பேச்சு வந்தபோது எங்களோடு போட்டியை பார்த்துக்கொண்டிருந்த ஈழநாடு குழுமத் தலைவர் சொன்னார், 'ஒரு தடவை பிரான்ஸ் தலை நகர் பாரிஸிலுள்ள ஆர்ஜென்ரீனிய ரெஸ்ரோரன்ற் ஒன்றுக்கு சென்றிருந்தபோது தங்களுக்கு உணவு பரிமாறவே அங்கிருந்த ஆர்ஜென்ரீனியர்கள் தயாராக இருக்கவில்லை. அதனால் நாங்கள் அங்கிருந்து வெளியேறவேண்டி வந்தது' என்று.

சிறுபான்மை என்பதாலேயே இன்றுவரை போராடிக் கொண்டிருக்கின்ற ஓர் இனக்குழுமம், ஒரு நிறவெறியர்களுக்கு ஆதரவாக கூக்குரலிட்டுக் கொண்டிருந்தது ஒரு முரண்நகை.!

**- ஊர்க்குருவி**




வட மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் அண்மையில் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் அதன், அதிபர் சத்தியகுமாரி சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இலவச புலமைப் ரிசில் கருத்தரங்கு நடைபெற்றது. இதில், கலந்து கொண்ட வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய உதவி அதிகாரி யாமன, மன்றத் தலைவர் மகேந்திரன், காப்பாளர் கந்தசாமி, பொதுச் செயலாளர் எஸ். கே. தளையரட்ணம் ஆகியோரையும் மாணவர்களையும் காணலாம்.

# தனித்து வசித்த மூதாட்டியின் வீடுடைத்து நகை, பணம் களவு

யாழ்ப்பாணம், டிசெ. 20

தனித்து வசித்த மூதாட்டி சமுர்த்தி கொடுப்பனவு பெறச் சென்ற சமயம் பார்த்து வீட் டின் கதவை உடைத்து நுழைந்து நகை, பணத்தை களவாடப் பட்டுள்ளது.

காரைநகர் - களபூமியில் இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஊர் காவற்றுறை பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்ப வத்தில் மூன்றரை பவுண் நகை கள், 25 ஆயிரம் ரூபாய் பணம் என்பன களவாடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-03)

# இங்கிலாந்து பெண் வன்புணர்வு 69 வயது சந்தேகநபர் கைதானார்

கொழும்பு, டிசெ. 20

இலங்கைக்கு வந்துள்ள இங்கிலாந்து பெண் ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட் படுத்தினார் என்ற குற்றச் சாட்டில் மிகிந்தலை பொலி ஸாரால் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மிகிந்தலை புனித பூமி பகுதியில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

சந்தேகத்தின் பேரில் ஹங் வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 69 வயதான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் 46 வயதுடைய பெண்ணே பாதிக்கப்பட்டவரா வார்.

சந்தேகநபரிடம் விசாரணை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத் துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே. ஜெயந்த புஷ்பகுமாரவின் ஆலோசனையில் மிகிந்தலை பொலிஸ் நிலைய பிரதான பரிசோதகர் என். ஆர். குண சேகர தலைமையில் மேற் கொள்ளப்பட்ட விசாரணை களையடுத்தே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# படித்த காலத்தில் வகுப்பில் நான் கடைசியாக வந்தேன்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 20

தான் இங்கிலாந்தில் சாதா ரண தரப் பரீட்சைக்கு படித் துக் கொண்டிருந்த போது வகுப்பில் கடைசியாக வந்தார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள் ளார்.

மஹரகமவில் மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரி வித்துள்ளார்.

"நான் இங்கு வெற்றி பெற் றேன். ஆனால், இங்கிலாந்தில் எனது வகுப்பில் நான் கடை சியாக வந்தேன். மொழி ஆய்வகங்கள் எனது ஆங்கில எழுத்தறிவை மேம்படுத்த உதவியது.

என் தந்தையின் அறிவுரைப் படி ஒவ்வொரு இரவும் செய்தி களைப் பார்த்தேன். ஆங்கில கல்வியறிவை மேம்படுத்துவது தகவல் தொழில்நுட்ப உலகை வெல்ல உதவும்" எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# மரண தண்டனையை மீண்டும் அமுல் செய்க

## அமைச்சர் மகிந்த அமரவீர



கொழும்பு, டிசெ. 20

இலங்கையில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவ னையை சமாளிக்க மரண தண்ட னையை மீண்டும் கொண்டு வர வேண்டும் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் வைத்திருப்பவர்களுக்கு கடுமையான தண்ட னையை வழங்குவதற்கான சட்டம் இப்போது உள்ளது. எந்த ஒரு நபருக்கும் அவர்களின் அந்தஸ்து அல்லது அந்தஸ்தைப் பொருட் படுத்தாமல் இந்த அரசாங்கம் சுதந்திரமாக செல்ல அனுமதிக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# இரு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 20

நாட்டில் நிலவும் கடும் மழை காரணமாக இரண்டு மாவட் டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களுக்கு இந்த மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக குறித்த பகுதிகளில் வசிப்பவர்கள் அவ தானமாக இருக்குமாறும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை விடுத் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu
20.12.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மார்கழி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

## நமது பலம் அறிவோமா?

அரசாங்கத்துடன் எவ்வாறு பேசவேண்டுமென்று பலவாறான அபிப்பிராயங்கள் கூறப்படுகின்றன. நிபந்தனைகளை முன்வைக்க வேண்டும் - அவற்றை ஏற்றுக்கொண்டால் மட்டுமே பேசவேண்டுமென்று கூறப்படுகின்றது. திம்பு கோட்பாட்டின் அடிப்படைகளை அரசாங்கம் அங்கீகரித்தால் மட்டுமே பேசவேண்டுமென்று கூறப்படுகின்றது. இவ்வாறு கூறுபவர்கள் அனைவரும் ஒரு விடயத்தை நன்கறிவார்கள். அதாவது, இவ்வாறான நிபந்தனைகளை நிர்ப்பந்திப்பதற்கான எந்தவோர் ஆற்றலும் தமிழர் பக்கத்தில் இல்லை.

தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றை உற்று நோக்கினால் ஒரு விடயம் தெளிவாகும். அதாவது, இரண்டு சந்தர்ப்பங்களில்தான் தமிழ்த் தேசிய அரசியல் நிர்ப்பந்திக்கும் ஆற்றலோடு இருந்திருக்கின்றது. அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் தமிழர்களின் அரசியலானது, ஆயுத பலத்துடனிருந்தது. இராணுவத்துக்கு எதிராக ஐந்து இயக்கங்கள் களத்திலிருந்தன. அத்துடன், இந்திய படைகள் வடக்கு - கிழக்கில் நிலைகொண்டிருந்த பின்னணியில்தான் திம்பு பேச்சு நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக இந்திய - இலங்கை ஒப்பந்தம் இடம்பெற்றது. அதன் விளைவாகவே 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபை முறைமை கிடைத்தது.

1990களுக்கு பின்னரான அரசியல் சூழலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனிநாட்டுக்கான ஆயுத விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்த நிலையில், விடுதலைப் புலிகள் ஒரு மரபுவழி இராணுவ கட்டமைப்பாகப் பரிணமித்தனர். இராணுவத்துக்கு சிம்மசொப்பனமாக எழுச்சியுற்றனர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் நோர்வேயின் மத்தியஸ்தத்தின் கீழ் ஒஸ்லோ பேச்சு இடம்பெற்றது.

கடந்த 73 வருட கால அரசியல் வரலாற்றில் மேற்படி இரண்டு சந்தர்ப்பங்களில் மட்டும்தான், சிங்கள ஆட்சியாளர்கள் கீழிறங்கிவந்த சந்தர்ப்பங்களாகும். இதற்கு தமிழர்களிடமிருந்த பலமே காரணம். செல்வநாயகம் தலைமையிலான தமிழரசு கட்சியால் முன்னெடுக்கப்பட்ட எந்தவொரு முயற்சியும் வெற்றி அளிக்கவில்லை. பண்டா - செல்வா பின்னர் டட்லி - செல்வா உடன்பாடுகள் சிங்கள ஆட்சியாளர்களால் உதாசீனம் செய்யப்பட்டன. ஆட்சியாளர்கள் உடன்பாட்டை உதாசீனம் செய்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை நிர்பந்திக்கும் ஆற்றல் செல்வநாயகத்திடம் இருநதிருக்கவில்லை.

2009இற்கு பின்னர் நிலைமைகள் பழைய நிலைக்குத் திரும்பியது. மீண்டும் அரசியலுக்கு பழைய - தோல்வியடைந்த மிதவாதிகளே தலைமை தாங்கினர். இவர்களால் எவ்வாறு அரசாங்கத்தை எதிர்கொள்ள முடியும் - அதற்கான வாய்ப்புகளும் சவால்களும் என்ன? இந்தக் கேள்விகளுடன்தான். கடந்த பதின்மூன்று வருடங்கள் கழிந்திருக்கின்றன. இந்தக் காலத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் விவாதித்திருந்த போதிலும்கூட, தமிழர் சார்பில் முன்னேற்றங்கள் நிகழவில்லை. ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியல் யாப்பு முயற்சிகளும் தோல்வியடைந்தன. ஒப்பீட்டடிப்படையில் அன்றைய சூழல் சாதகமாக இருந்த போதிலும்கூட சம்பந்தன் விடயங்களை புத்தி சாதுரியமாக கையாண்டிருக்கவில்லை. இன்று ரணிலின் சர்வகட்சிக் கூட்டத்தில் முன்வைத்தது போன்று, அன்று சில கோரிக்கைகளை முன்வைத்திருந்தால் சில முன்னேற்றங்களை கண்டிருக்கலாம். அரசமைப்பிலுள்ள விடயங்களை அமுல்படுத்துவத்தில் முன்னேற்றங்களை கண்டிருக்கலாம். ஆனால், அன்றைய சூழலில் இந்த விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்ட போதிலும் சம்பந்தன் அவற்றை பொருட்படுத்தியிருக்கவில்லை.

சர்வகட்சிக் கூட்டத்தின் மூலம் புதிய விடயங்கள் எதனையும் செய்யகூடிய வாய்ப்பில்லை. ஆனால், அரசியலமைப்பில் இருக்கின்ற சில விடயங்களை அமுல்படுத்துவதில் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புண்டு. இவற்றுக்கு அப்பால், விடயங்களை கையாள வேண்டுமாயின் அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து கீழிறங்கி வரச் செய்யும் ஆற்றல் தமிழர்களிடத்தில் இருக்க வேண்டும். அவ்வாறானதொரு சூழலில்தான் சிலர் எதிர்பார்ப்பது போன்று நிபந்தனைகளை விதிக்க முடியும். பலமற்ற நிலையில் கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு, எதிர்காலத்தை நோக்கி தந்திரத்துடன் காத்திருப்பதைத் தவிர வேறு வழிகள் இல்லை. நமது பலமறியாமல் விடயங்களை விவாதித்துக் கொண்டிருப்பதில் எவ்வித பயனுமில்லை.

# பெரும் நட்டத்தில் இயங்கிவரும் 52 முக்கிய அரச நிறுவனங்கள்!

*கொழும்பு, டிசெ. 20*

*அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஐம்பத்திரண்டு பிரதானஅரச நிறுவனங்கள்பெருந்தொகை நட்டத்தை சந்தித்து வருவதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*இதற்கமைய, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், மின்சார சபை மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உட்பட 52 நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*இந்த தகவல் படி ஒரு வருடத்தில் இந்த அரசு நிறுவனங்களால் ஏற்பட்ட இழப்பு 86000 கோடி ரூபாய் என்றும், 2021 ஆம் ஆண்டில் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் ஏற்பட்ட மொத்த இழப்பை விட அதிகம் என்றும் கூறப்படுகின்றது.*

*அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை*

*மேலும், 420 அரச நிறுவனங்கள் அரசால் பராமரிக்கப்படுவதாக அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.*

*இருப்பினும், இந்த அரச நிறுவனங்களில் முப்பத்திரண்டு ஊழல் நிறைந்த நிறுவனங்கள் உள்ளதாக கோப் குழு அண்மையில் தெரிவித்திருந்தது.*

*அந்த அறிக்கையின் படி கடந்த ஐந்து ஆண்டுகளில் 32 நிறுவனங்களின் இழப்பு 46,500 கோடி ரூபாய் எனவும், அந்த நிறுவனங்களில் பெற்றோலிய கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் மற்றும் இலங்கை மின்சார சபை என்பன அதிகளவு நஷ்டம் அடையும் நிறுவனங்களாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளன.*

*இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பெட்ரோலியம் கூட்டுத்தாபனம் ரூ.62,800 கோடி நட்டம் அடைந்துள்ளதுடன், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ரூ.24,800 கோடியும், மின்சார சபை ரூ.4700 கோடியையும் இழந்துள்ளன.*

*இதற்கிடையில், நட்டத்தில் இயங்கும் 39 அரசு நிறுவனங்கள் மறுசீரமைப்பு பட்டியலில் இருப்பதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.*

# 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை வினாவில் குழப்பம்

*கொழும்பு, டிசெ. 20*

*நேற்றுமுன்தினம் இடம் பெற்ற 05 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் வினாத்தாள் ஒன்றில் குறிப்பிடப்பட் டிருந்த வினா தொடர்பில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக புலமைப் பரிசில் பரீட் சைக்கு தோற்றிய மாணவர் கள் தெரிவித்ததாக அவர்க ளது பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.*

*வினாப்பத்திரத்தின் 42 ஆவது கேள்வியில் சர்வதேச விமான நிலையங்கள் இரண்டினைக் குறிப்பிடும் விடை எது என கேட்கப்பட் டுள்ளது.*

*- கட்டுநாயக்க மற்றும் இரத்மலானை,*
*- கட்டுநாயக்க மற்றும் மத்தள*
*- மத்தள மற்றும் பலாலி*

*இவ்வாறு விடைகள் கோரப்பட்டிருந்தன.*

*இங்கு குறிப்பிட்ட மூன்றும் சர்வதேச விமான நிலையங்கள் என பெற்றோரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பெற்றோரால் இந்த முறைப்பாடுகள் பரீட்சை திணைக்களத்துக்கு வந்துள்ள நிலையில் இந்த விடயம் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன கூறுகையில்,*

*விடைத்தாள்களை சரி பார்க்கும் முன் வல்லுநர் குழுவால் இந்த வினா சரி பார்க்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். (அ)*

## இரண்டு மாதங்களுக்குள் புலமைப்பரிசில் பெறுபேறு

*கொழும்பு, டிசெ. 20*

*புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளை ஒன்றரை அல்லது இரண்டு மாதங்களுக்குள் வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்தார்.*

*அதன்படி விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியை நாளை ஆரம்பிப்போம் என்றும் பரீட்சை ஆணையாளர் குறிப்பிட்டார்.*

*இதேநேரம் உயர்தரப் பரீட்சையை ஜனவரி 23ஆம் திகதி நடத்துவதற்கான ஆயத்தங்களைச் செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)*

# தெஹிவளை மிருகக்காட்சிசாலையை இலவசமாகப் பார்வையிட சந்தர்ப்பம்

*கொழும்பு, டிசெ. 20*

*எதிர்வரும் 23 மற்றும் 24ஆம் திகதிகளில் தெஹிவளை மிருகக்காட்சி சாலையை இலவசமாக பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*அதற்கமைய, எதிர்வரும் 23ஆம் திகதி சிரேஷ்ட பிரஜைகளும் எதிர்வரும் 24ஆம் திகதி சிறுவர்களும் இலவசமாக மிருகக்காட்சி சாலையை பார்வையிட முடியும் என தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜகத் பிரேமகாந்த குறிப்பிட்டார்.*

*எதிர்வரும் 23, 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள மிருகக்காட்சி சாலையின் சுற்றாடல் கல்வி கண்காட்சிக்கு இணையாக இந்த சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக அவர் கூறினார். (அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



டிசெம்பர் - 20 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 05
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : துவாதசி




**மேடம்**
திட்டமிட்டிருந்த செயல்களை நினைத்தபடி செய்து முடிப்பீர்கள். அரசு வழி எதிர்பார்ப்பு நிறைவேறும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட சங்கடம் அணுகுமுறையால் விலகும்.

**இடபம்**
முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். நன்மையான நாள். உங்கள் எண்ணத்தை நிறைவேற்றுவீர்கள்.எதிர்பார்த்த பணம் இன்று வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நாள்.

**மிதுனம்**
குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். முயற்சிகள் வெற்றியாகும். எதிர்பாராத வருவாய் ஏற்படும். நீண்டநாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். முயற்சி இன்று நடந்தேறும்.

**கடகம்**
பயணத்தால் அலைச்சலும் செலவுகளும் அதிகரிக்கும் என்றாலும் விருப்பம் நிறைவேறும். திறமையை வெளிப்படுத்துவீர்கள். விழிப்புணர்ச்சியுடன் செயல்படுவதால் நன்மை அதிகரிக்கும்.

**சிம்மம்**
நீங்கள் விரும்பிய மாற்றத்தை அடைவீர்கள். பண வரவு திருப்தி தரும். விரும்பிய பொருட்களை வாங்குவீர்கள். லாபகரமான நாள். தடைகளைத் தாண்டி முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி**
விலகிச் சென்றவர்கள் தேடி வருவார்கள். திட்டமிட்ட செயல் எளிதாக நிறைவேறும். வருமானத்தில் ஏற்பட்ட தடை விலகும். தம்பதிகளுக்குள் ஒற்றுமை உண்டாகும். உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**துலாம்**
மகிழ்ச்சியான சம்பவம் நடைபெறும். குடும்பத்தின் தேவை அறிந்து செயல்படுவீர்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும்.குழப்பங்களுக்கு இடம் தர வேண்டாம். முயற்சியால் புத்துணர்வு பெறுவீர்கள்.

**விருட்சிகம்**
வெளியூர் பயணம் வெற்றி தரும். எதிர்பார்த்தவற்றில் லாபம் காண்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். பயணத்தால் அலைச்சலும் செலவுகளும் அதிகரிக்கும். அதனால் முயற்சியில் லாபம் உண்டாகும்.

**தனுசு**
வருமானம் அதிகரிக்கும்.நிதி நெருக்கடி விலகும். எதிர்பார்த்த பணம் இன்று வந்து சேரும் நாள். நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**மகரம்**
பகைவர்கள் விலகிச் செல்வார்கள்.பொறாமையாளர் முன்னேற்றத்தைக் கண்டு விமர்சனம் செய்வார்கள். ஆரோக்யம் சீராகும். துணிச்சலுடன் செயல்பட்டு நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள்.

**கும்பம்**
இரண்டு நாட்களாக இருந்த நெருக்கடி விலகும். எதிர்பார்த்த வரவு வந்து சேரும். புதிய முயற்சி நன்மையாகும். குடும்பத்தினர் ஒத்துழைப்புடன் புதிய சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**மீனம்**
இன்று சந்திராஷ்டமம் என்பதால் அமைதியைக் கடைபிடியுங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் கோபத்திற்கு ஆளாவீர்கள். செயல்களில் தடை தாமதம் ஏற்படும். கவனக்குறைவுக்கு இடம் அளிக்காதீர்கள்.

# வருமான விவரங்களை வெளியிட தி. மு. கவினர் தயாராக உள்ளனரா?

## கேள்வி எழுப்புகிறார் அண்ணாமலை



*சென்னை, டிசெ. 20*

"வருமான விவரங்களையும் அசையும் மற்றும் அசையா சொத்துகளின் விவரங்களையும் தி. மு. கவினர், தி. மு. க. தலைவர்கள் தமிழக சகோதர சகோதரிகளின் முன்னிலையில் வெளியிட தயாரா?" என்று பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது ருவிற்றர் பக்கத்தில், "தி. மு. கவினர் என்னுடன் ஊழல் குறித்து விவாதிக்க விரும்புவதால், நான் அதை எதிர்கொள்ள ஆவலுடன் இருக்கிறேன். நான் தமிழக பா. ஜ. க. தலைவராக பொறுப்பேற்பதற்கு முன்பு, மே மாதம் 2021இல் வாங்கிய எனது ரபேல் கைக்கடிகாரத்தின் விவரங்கள், அதன் பற்றுச்சிட்டை மற்றும் எனது வாழ்நாள் வருமான வரி அறிக்கைகள், 10 ஆண்டுகால எனது வங்கிக் கணக்குகளின் பரிவர்த்தனைகள் (எனது ஒவ்வொரு வருமானமும் காட்டப்படும்), ஒகஸ்ட் 2011 முதல் ஐ. பி. எஸ். அதிகாரியாக நான் பொறுப்பேற்றது முதல் ராஜிநாமா செய்யும் வரை ஈட்டிய வருமானம் , எனக்குச் சொந்தமான அசையும் அசையா சொத்துகளின் விவரங்கள்,

என்னிடம் உள்ள ஆடு மற்றும் மாடுகளின் எண்ணிக்கை என அனைத்தையுமே விரைவில் நமது பாரதப் பிரதமர் நரேந்திர மோடியைப் போற்றும் நம் தமிழக மக்களைச் சந்திப்பதற்காக மாநிலம் முழுவதும் நான் மேற்கொள்ளவிருக்கும் பாதயாத்திரையின் முதல் நாளில் வெளியிடுவேன். அன்றைய தினம் நான் பத்திரிகையாளர்களை சந்தித்து மேல் குறிப்பிட்ட அனைத்து விபரங்களையும் பொதுவெளியில் வெளியிட உள்ளேன்.

நான் அறிவித்ததை விட ஒரு சதம் அதிகமான சொத்தை யாரேனும் கண்டுபிடித்தால், எனது சொத்துக்கள் அனைத்தையும் அரசிடம் ஒப்படைக்க நான் தயார். இதே போல வருமான விவரங்களையும் அசையும் மற்றும் அசையா சொத்துகளின் விவரங்களையும் தி. மு. கவினர் மற்றும் தி. மு. க. தலைவர்கள் தமிழக சகோதர சகோதரிகளின் முன்னிலையில் வெளியிட தயாரா?" என்று பதிவிட்டுள்ளார்.

முன்னதாக ரபேல் விமானங்களை இந்தியா வாங்கிய போது, அந்தப் பாகங்களை வைத்து உருவாக்கப்பட்ட 500 கைக்கடிகாரங்களில் 149 ஆவது கைக்கடிகாரம் தன்னுடையது என்று கூறியிருந்தார். இந்த விவகாரத்தை தி. மு. கவினர் கடுமையாக விமர்சித்ததை தொடர்ந்தே அவர் இந்தப் பதிவை இட்டுள்ளார். (ஐ)

# ராகுல் காந்தி யாத்திரையில் கமல்ஹாசனும் பங்கேற்கிறார்!

*சென்னை, டிசெ. 20*

காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர் ராகுல் காந்தி மேற்கொண்டு வரும் இந்திய ஒற்றுமை யாத்திரையில், வரும் 24ஆம் திகதி டில்லியில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் பங்கேற்கிறார் என்று அந்தக் கட்சியின் துணைத் தலைவர் மவுரியா தெரிவித்துள்ளார்.

மக்கள் நீதி மய்யத்தின் கட்சிக் கூட்டத்தின் பின்னரே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

மேலும், டில்லியில் வரும் 24ஆம் திகதி நடைபெறும் பாரத் ஜோடோ யாத்ராவில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் கலந்துகொள்கிறார். அவருடன் மக்கள் நீதி மய்யம் கட்சியினரும் கலந்துகொள்கிறோம்.

ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காகத்தான் இந்த யாத்திரையில் பங்கேற்கிறோம். இந்த பாரத் ஜோடோ யாத்திரையில் கலந்துகொள்ள காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி, அவரின் கைப்பட எழுதி அழைப்பு விடுத்துள்ளார். இது கூட்டணிக்கானது அல்ல.

இந்திய ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு யாத்திரை. மக்கள் நீதி மய்யம் கட்சியின் வெற்றிக் காக ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம். தொடர்ந்து கட்சியைப் பலப்படுத்தும் விதமாக ஆங்காங்கே தொடர் கூட்டங்கள் நடத்தப்பட உள்ளது" என்று அவர் கூறினார். (ஐ)

# மக்களை சாதி, மதம் என்று பிரிக்கின்றனர் பா. ஜ. கவினர்!

## தி. மு. க. குற்றச்சாட்டு

*விழுப்புரம், டிசெ. 20*

மக்களை சாதி, மதம் என பிரிக்கும் வேலையை பா. ஜ. கவினர் செய்து வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டியள்ளார் தி. மு. கவின் கனிமொழி எம். பி. கூறியுள்ளார்.

திண்டிவனத்தில் பேராசிரியர் அன்பழகன் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இக்கூட்டத்தில் கனிமொழி எம். பி. பேசுகையில்,

2ஜி வழக்கை வைத்து பல அரசியல் கட்சிகள் நம்மை விமர் சனம் செய்தார்கள். ஆனால், தற்போது நீதிமன்றம் 2ஜி வழக்கே பொய் என தீர்ப்பளித்துள்ளது. பா. ஜ. க. ஆட்சி இல்லாத மாநிலங்களில் ஆளுநரை நியமித்து, அங்கு ஆர். எஸ். எஸ். பணிகளை செய்து வருகிறார்கள்.

தமிழகம் தற்போது வளர்ந்த பாதையில் இருக்கிறது. மருத்துவக் கல்வியில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்கிறது. இதுதான் திராவிட மொடல்.

மக்களை சாதி, மதம் என பிரிக்கும் வேலையை பா. ஜ. கவினர் செய்து வருகின்றனர். அ. தி. மு. க. ஆட்சியில் இருக்கும்வரை தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி தரவில்லை. ஆனால், இளைஞர் நலனில் அக்கறை கொண்டு வேலை வாய்ப்புகளை உருவாக்கியவர் முதல்வர் ஸ்டாலின் - என்றும் சொன்னார். (ஐ)

# மீனவர்களை விரட்டியது இலங்கைக் கடற்படை!

*இராமேஸ்வரம், டிசெ. 20*

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 600இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் விரட்டப்பட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவு கச்சத்தீவு அருகே மீன்பிடித்தபோது கண்காணிப்புக்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடிக்கக் கூடாது என எச்சரித்தனர். 10இற்கும் மேற்பட்ட படகுகளில் வலைகளை அறுத்து கடலுக்குள் மூழ்கடித்தனர் என்றும் கூறப்படுகின்றது.

இலங்கை கடற்படையினர் விரட்டியடித்ததால் அச்சமடைந்த மீனவர்கள், மீன்பிடிக்காமல் கரை திரும்பினர்.

கரை திரும்பிய மீனவர்கள் "இலங்கை கடற்படையினரின் தாக்குதல் நீடித்து வருகிறது. இலங்கை கடற்படையினரின் தாக்குதல்களை தடுத்து நிறுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்", என்று கோரியுள்ளனர். (ஐ)

# துப்பாக்கிச் சூட்டில் வர்த்தகர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 20

கொழும்பு - ஹங்வெல்ல பிரதேசத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் 46 வயதுடைய ஹங்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவராவார்.

உயிரிழந்த நபர் உணவு பொருள் விற்பனை நிலையத்தின் உரிமையாளர் ஒருவர் எனவும் அவர் வர்த்தக நிலையத்தில் இருந்தபோது இந்த துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

மேலும் திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து குறித்த நபர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு இன்று பஸ் கையளிக்கிறார் சஜித்!

யாழ்ப்பாணம், டிசெ. 20

இலங்கையை முதலிடத்துக்கு கொண்டு வரவேண்டும் என்ற தூர நோக்கோடு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மக்கள் நலன் கருதி மக்களுக்காக, குறிப்பாக மாணவர்களின் நலன் கருதி பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்.

இன்று காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி பாடசாலை மாணவர்களுக்கு பஸ் ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேரடியாக கையளிக்க உள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் உமா சந்திரபிரகாஷ் தெரிவித்தார்.

யாழில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாணத்தில் மாணவர் சமூகத்துக்கு இருக்கக்கூடிய முக்கிய பிரச்னை என்று பார்க்கும்போது போதைப் பொருள் பாவனை தொடர்பில் இலங்கை முழுவது மிக முக்கிய வேலைத்திட்டங்களை அரசும், அதிகாரிகளும் செய்து கொண்டு வருகிறார்கள்.

இவ்வாறான திட்டங்களால் போதையால் சீரழியும் எங்கள் எதிர்காலச் சந்ததியினரை போதையில் இருந்து மீட்டு எடுக்கும் செயற்பாடுகளை மேற்கொள்வோருக்கு எங்கள் நன்றிகள்.

இந்த போதைப்பொருட்கள் வெளிநாடுகளில் இருந்து குறிப்பாக இந்தியாவில் இருந்து இலங்கைக்குள் ஊடுருவுகின்றன. இது ஒரு பெரிய வர்த்தகமாக இலங்கையில் இருக்கின்றது. இதில் ஈடுபடுபவர்கள் முக்கிய பிரமுகர்களாக ,புள்ளிகளாக இருக்கின்றனர்.

பிரதான வைத்தியசாலைகளில் மிக முக்கியமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு இருக்கின்றன. குறிப்பாக புற்று நோயாளர்களுக்கான மருந்துகள், ஏனைய அதிதீவிர நோயில் இருப்பவர்களுக்கான மருந்து தட்டுப்பாடு இருக்கிறது.

சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கும் மருந்து இல்லை.எத்தனையோ நோயாளிகள் தங்கள் தங்க நகைகளை அடகு வைத்து மருத்துவமனைகளுக்கு கொடுத்துத்தான் அவசர சத்திர சிகிச்சைகளை மேற்கொள்கிறார்கள்.

எனவே மருத்துவம் என்பது மக்களின் உயிர் நாடி. மக்களுக்கான மருத்துவ தேவைகளை நிறைவேற்றிக்கொடுப்பது தொடர்பான திட்டங்களை அரசு முறையாக உருவாக்க வேண்டும்-என்றார். (அ)

# நாணய நிதியம் இலங்கைக்கு எதனையும் தெரிவிக்கவில்லை

## கைவிரிக்கிறார் செஹான் சேமசிங்க



கொழும்பு, டிசெ. 20

கடன் தொடர்பில் உலக நாடுகளின் பேச்சுவார்த்தை குறித்து சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு எதனையும் தெரிவிக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ள இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, இது குறித்து இலங்கைக்கு தெரிவிக்கப்பட்டால் இலங்கை கலந்துகொள்ளவேண்டும் என்றால் அரசாங்கம் கலந்துகொள்ளும் என தெரிவித்தார்.

எங்களுக்கு இது குறித்து தெரிவிக்கப்பட்டால்-எங்களின் பிரசன்னம் தேவைப்பட்டால் நாங்கள் நிச்சயம் கலந்து கொள்வோம். ஆனால் வெளியாகியுள்ள செய்தியின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணயநிதியத்தின் நிதி உதவியை பெறுவது தொடர்பில் காணப்படும் முன்னேற்றம் குறித்த கேள்விக்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் காலக்கெடு என்று எதுவுமில்லை. ஆனால் கூடிய விரைவில் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்-என்றார்.

நாங்கள் இப்படித்தான் செய்யவேண்டும் என கடுமையான விதிமுறைகள் எதுவுமில்லை. ஆனால் எங்களுக்கு கடன் வழங்கியவர்களின் உத்தரவாதத்தை நாங்கள் பெறவேண்டியுள்ளது. இன்னமும் அது எங்களுக்கு கிடைக்கவில்லை. இதன் அர்த்தம் அவர்கள் நிராகரித்துவிட்டனர் என்பதில்லை.

அவர்கள் மேலும் பல விடயங்கள் குறித்து தெளிவுபடுத்துமாறு கோரியுள்ளனர்,16 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பில் நாங்கள் இது குறித்து ஆராய்ந்துள்ளோம்.

உத்தேச வட்டமேசை பேச்சுவார்த்தைகள் இந்த விடயங்கள் குறித்து ஆராயலாம். இலங்கைக்கு இது நன்மையான விடயம்-என்றார். (அ)

# நித்திரைக்கு செல்ல மறுத்த மகன் பொலிஸாரிடம் முறையிட்ட தாய்!

கொழும்பு, டிசெ. 20

தரம் மூன்றில் கல்வி பயிலும் தனது மகன் இரவு 7 மணிக்கு நித்திரைக்கு செல்லாத காரணத்தால் அச் சிறுவனின் தாயார், 119 என்ற பொலிஸ் அவசர பிரிவிற்கு அழைப்பையெடுத்து முறைப்பாடு செய்த சம்பவமொன்று தம்புள்ளை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தம்புள்ள பொலிஸாருக்கு இரவு நேரம் அவசர தொலைபேசி அழைப்பு ஒன்று கிடைத்துள்ளது. அதன்படி தமது பிள்ளை குழப்பம் செய்வதாகவும் குடும்ப அங்கத்தவர்களுக்கு அச்சுறுத்தல் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து இரு பொலிஸார் சம்பந்தப்பட்ட வீட்டுக்கு சென்றுள்ளனர். சுமார் 15 கிலோ மீற்றர் தூரம் பயணித்து வீட்டைத் தேடிப்பிடித்துள்ளனர். வீடு மூடப்பட்டு அமைதியாகக் காணப்பட்டுள்ளது.

பொலிஸார் அவர்களை எழுப்பி, 119 தொலைபேசி இலக்கத்திற்கு கிடைத்த முறைப்பாட்டை விசாரிக்க வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். அப்போது முறைப்பாட்டை வழங்கிய பெண்,

“இப்போது காலம் கடந்து விட்டதே, நான் 7 மணிக்கு அல்லவா தொலைபேசி எடுத்தேன். தற்போது இரவு 9 மணி ஆகிவிட்டதே என்று கூறியுள்ளார். விடயம் புரியாத பொலிஸார் மேலதிக தகவல்களை கேட்டுள்ளனர்.

அதன் போதுதான் பின்வரும் விடயம் தெரிய வந்துள்ளது.

இரவு 7 மணிக்கு முன்பே பிள்ளைகளுக்கு உணவளித்து நித்திரைக்கு அனுப்புவதாகவும் ஆனால் 3ஆம் தரத்தில் கல்வி பயிலும் குறிப்பிட்ட ஒரு மகன் மட்டும் நித்திரை செய்யாது மற்றயவர்களுக்க இடையூறு செய்வதாகவும், எனவே அவரைப் பயமுறுத்தி நித்திரை செய்ய வைக்கவே பொலிஸாருக்க தகவல் தெரிவித்தாகவும் கூறியுள்ளார்.

இதனைக் கேட்ட பொலிஸார் கடுப்பாகினர் . இப்படியான சிறிய விடயங்களுக்கு எங்களை அழைக்கக்கூடாது என்றும், இதனால் மக்கள் பணம் வீண் விரயமாகின்றது எனவும், தமது கடமைகளை செய்வதில் தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவித்து கடும் எச்சரிக்கை செய்து, மீண்டும் பொலிஸ் நிலையம் திரும்பியுள்ளனர். (அ)

# பயிற்சி இன்றி பணிப்பெண்கள் வெளிநாட்டுக்கு செல்ல முடியாது

கொழும்பு, டிசெ. 20

அடுத்த வருடம் மார்ச் மாதம் முதல் இலங்கைப் பெண்கள் வீட்டுப் பணியாளர்களாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவது நிறுத்தப்படும் என்றும், சர்வதேச தரத்திலான பயிற்சிகளை வழங்கி வீட்டுப் பணிப்பெண்களை வேலைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கைப் பெண்களுக்கு வெளிநாட்டில் வீட்டுப் பணியாளர்களாக பணியாற்றுவதற்கு உயர்தரப் பயிற்சிகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அதிகாரி, அடுத்த வருட ஆரம்பத்தில் இந்தப் பயிற்சி ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# ரூ.50 இலட்சம் கேட்டு கணவனிடம் கடத்தல் நாடகமாடிய மனைவி கைது!

கொழும்பு, டிசெ. 20

ரூ.50 இலட்சம் கப்பம் கோரி தன்னை ஆயுதக்குழு கடத்தி விட்டதாக, கணவனிடம் நாடகம் ஆடிய மனைவியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடத்தப்பட்டதாக கூறி, அவர் தனது சகோதரனின் வீட்டில் பதுங்கியிருந்த நிலையில் நேற்று முன் தினம் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பெண் ஆனமடுவ நகரில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தாயாவார்.

குறித்த பெண்ணின் கணவர் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி எனவும் அவர் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் ஒப்பந்தகாரராக பணிபுரிந்து தற்போது ஒப்பந்தங்களால் நட்டமடைந்து வீட்டில் உள்ளதாகவும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த பெண் கடந்த 15ஆம் திகதி ஆனமடுவ வீட்டிலிருந்து தனது மகள் வசிக்கும் வாரியபொல, ஹன்ஹமுன நவகத்தம பகுதிக்குச் சென்றதாகவும், அன்று மாலையில் ஆனமடுவ நகருக்கு திரும்பி வருவதாக கணவருக்கு தொலைபேசி அழைப்பு எடுத்ததாகவும், அன்று மாலையில் இருந்து காணாமல் போயிருந்ததாகவும் கூறப்படுகிறது.

தாயார் வருவார் என ஆனமடுவ நகரில் காத்திருந்த இப்பெண்ணின் இளைய மகன் மாலை வரை காத்திருந்தும் தாயாரைக் காணவில்லை.

பின்னர் அவர் கடத்தப்பட்டதாக தொலைபேசி வந்ததால் இளைய மகன் ஆனமடுவ பொலிஸில் 15 ஆம் திகதி மாலை முறைப்பாடு செய்துள்ளார்.

தன்னை 50 இலட்சம் ரூபா கேட்டு ஆயுதக்குழு கடத்தியுள்ளதாகவும், தன்னிடம் வங்கிப் புத்தகம் உள்ளதால், அந்த இலக்கத்துக்கு உடனடியாக 50 இலட்சம் ரூபாவை வைப்பிலிடுமாறும் கூறியிருக்கிறார்.

இப்பெண் தொடர்பில் எவ்வித தடயங்களும் இல்லாததால் ஆனமடுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.ஆர்.ஹேமந்த நந்தகுமார உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவித்து உரிய அறிவுறுத்தல்களை பெற்று விசாரணைகளை ஆரம்பித்தார்.

எவ்வாறாயினும், ஆனமடுவ பொலிஸார் ஏற்கனவே குறித்த பெண் பயணித்த இடங்கள் மற்றும் உரிய வீதிகளின் கண்காணிப்பு கமெராக்களை பரிசோதித்து உரிய விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இந்த பெண் கடத்தப்பட்டதாக எந்த ஒரு தகவலையும் பொலிஸாரால் எங்கும் கண்டுபிடிக்க முடியவில்லை.

பின்னர், இந்த பெண்ணின் தொலைபேசி பதிவைப் பெற்று இந்த பெண்ணின் இருப்பிடம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டனர்.

அதன்படி, குறித்த பெண் தங்கியிருந்த கட்டுபெத்த பிரதேசம் தொடர்பில் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும், பின்னர் குறித்த பெண் சகோதரர் ஒருவரின் வீட்டில் இருந்தபோதே கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தனது இளைய மகன் வெளிநாடு செல்வதற்காக சுமார் 9 இலட்சம் ரூபாவை வட்டிக்கு வாங்கி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கு வழங்கியதாகவும், அந்த பணம் வட்டியுடன் சேர்த்து பெரிய தொகையாக மாறியுள்ளதாகவும், அந்த பணத்தைச் செலுத்த இவ்வாறு நாடகமாடியதாகவும் கைது செய்யப்பட்ட பெண் பொலிஸாரிடம் வாக்கு மூலம் அளித்துள்ளார். (அ)

# கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை நகர பிதா விலகல்!

## செயலாளரிடம் இராஜிநாமாக் கடிதம் கையளிப்பு

வடமராட்சி, டிசெ. 20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை நகர சபையின் தலைவர் யோ. இருதயராஜா தனது பதவியை நேற்று காலை இராஜிநாமா செய்துள்ளார்.

பருத்தித்துறை நகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு - செலவுத் திட்டம் நேற்று சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதங்கள் இடம்பெற இருந்தன. அதற்காகச் சபை காலை 9:30 மணிக்குக் கூடவிருந்தது.

இந்நிலையில், காலை 9:20 மணிக்கு வருகை தந்த நகர சபைத் தலைவர் யோ. இருதயராஜா, சபையின் செயலாளரிடம் தனது பதவி விலகல் கடிதத்தைக் கையளித்துவிட்டு வெளியேறினார்.



இதைத் தொடர்ந்து 9:35 மணியளவில் சபையைக் கூட்டிய பருத்தித்துறை நகர சபை செயலாளர், தலைவர் பதவி விலகியதைச் சபைக்கு அறிவித்ததுடன் அவர் பதவி விலகியது தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரித்து புதிய தவிசாளர் தெரிவாகும் வரை சபை நடவடிக்கை இடம்பெறாது எனவும் தெரிவித்தார்.

திருத்திய வரவு - செலவுத் திட்டத்தை ஆளும் தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளிட்ட சபையில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உறுப்பினர்கள் பலர் ஒன்று சேர்ந்து மீண்டும் தோற்கடிக்கவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், தான் இன்று சபை அமர்வுக்கு முன்பதாகவே தலைவர் பதவியில் இருந்து விலகியுள்ளார் என்று இருதயராஜா அறிவித்துள்ளார்.

15 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை நகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் கடந்த 5ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்ட போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் 6 பேர், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஒருவர் என 8 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்துத் தோற்கடித்திருந்தனர்.

அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 4 பேர், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவர், சுயேச்சைக் குழு உறுப்பினர் ஒருவர், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஒருவர் என 7 பேர் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

இதையடுத்து நேற்று திருத்தங்களுடன் சபையில் சமர்ப்பிக்கப்படவிருந்த வரவு - செலவுத் திட்டத்தையும் சபை உறுப்பினர்கள் பலர் தோற்கடிக்கத் திட்டமிட்டுள்ளனர் என்று வெளியான தகவலையடுத்து நகர சபைத் தலைவர் தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

இரண்டாம் தடவையும் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் தலைவர் பதவி வறிதாகும். அந்நிலையில், தோற்கடிக்கப்பட்டு தலைவர் பதவியை இழக்காது இருப்பதற்காகத் தலைவர் தனது பதவியில் இருந்து விலகியுள்ளார் என்று சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# கொத்து ரொட்டி விலை குறைப்பு

கொழும்பு, டிசெ. 20

உணவகங்களில் சிற்றுண்டி மற்றும் கொத்து ஆகியவற்றின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்படும் என சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலை குறைப்பிற்கு ஏற்ப இவ்வாறு விலை குறைக்கப்பட்டுள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

அதனடிப்படையில் கொத்து, மறக்கறி ரொட்டி, பராட்டா மற்றும் முட்டை ரொட்டியின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. (அ)

# சப்புகஸ்கந்த மீண்டும் மூடப்படும் அபாயம்!

கொழும்பு, டிசெ. 20

சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் சுத்திகரிக்கப்பட்ட பொருட்களைச் சேமித்து வைக்க முடியாத காரணத்தினால் மீண்டும் ஒரு முறை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் கடந்த 16ம் திகதி முதல் மீள ஆரம்பிக்கப்பட்ட நிலையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்படுகின்றது.



சமீபத்தில் இறக்குமதி செய்யப்பட்ட மசகு எணணெய் பற்றாக்குறையால் சுத்திகரிப்பு ஆலையின் பணிகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக முன்னரே அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 10 இற்கும் மேற்பட்ட மாடுகள் மர்மமான முறையில் மரணம்!





வவுனியா, டிசெ. 20

வவுனியா பூம்புகார் கிராமத்திலே உள்ள விவசாய நிலத்தில் நேற்று முன் தினம் மாலை மர்மமான முறையில் 10 இற்கும் மேற்பட்ட மாடுகள் இறந்துள்ளன.

குறித்த கிராமத்தில் உள்ள விவசாய நிலத்தினுள் அப்பிரதேசவாசிகளின் மாடுகள் சில உட்புகுந்து அங்குள்ள உழுந்து மற்றும் நெற் பயிர்களை மேய்ந்துள்ளதாகவும் இதனை கண்ணுற்ற விவயாய நில உரிமையாளர் ஆத்திரமடைந்து அம்மாடுகளுக்கு யூரியா மற்றும் பூச்சிகொல்லி மருந்தை நீரில் கலந்து குடிக்க வைத்துள்ளார் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

இதனை அடுத்து மடுகள் உயிரிழந்துள்ளதாக அந்தக் கிராம கமக்கார அமைப்பினர் மற்றும் மாட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இதனைவிட அந்நீரினை பருகிய ஏனைய மாடுகளும் தற்போது நோய் வாய்ப்பட்டுள்ளதாகவும் மாட்டு உரிமையாளர்கள் கூறினர்.

இச்சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் நேற்று முன் தினம் மாலை நேரில் சென்று பார்வையிட்டதுடன், மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (அ-5)

# வியட்நாமில் உயிரிழந்த இளைஞனின் உடல் நேற்று சாவகச்சேரியில் அடக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 20

கனடாவுக்கு சட்ட விரோதமாக படகு மூலம் செல்ல முற்பட்டு வியட்நாமில் உயிரிழந்தவரின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சட்டவிரோதமாக படகு மூலம் கனடா செல்ல முயற்சித்தபோது, படகு பழுதடைந்த நிலையில், கடந்த மாதம் 08 ஆம் திகதி 303 அகதிகளும் வியட்நாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வாறு வியட்நாம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் இருவர், தங்களை நாட்டுக்கு திருப்பி அனுப்ப வேண்டாம் என தெரிவித்து கடந்த மாதம் 18 ஆம் திகதி தற்கொலைக்கு முயற்சித்தனர்.

இருவரும் வியட்நாமிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த 37 வயதான சுந்தரலிங்கம் கிரிதரன் உயிரிழந்தார்.



உயிரிழந்த சாவகச்சேரி, கல்வயல் பகுதியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சுந்தரலிங்கம் கிரிதரனின் சடலம்,நேற்று முன்தினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அத்துடன், நேற்று அவரின் இல்லத்தில் இறுதிக்கிரகைகள் இடம் பெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பெட்டி மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. (அ)

# போதைப்பொருள் அச்சுறுத்தலில் இருந்து மாணவர்களை விடுவிக்க விசேட திட்டம்!

## புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தகவல்

கொழும்பு, டிசெ. 20

போதைப்பொருளின் அச்சுறுத்தலில் இருந்து பாடசாலை மாணவர்களை விடுவிக்க விசேட வேலைத்திட்ட மொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்தார்.

அதற்கு அனைத்து தரப்பினரின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நாட்களில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீது சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் விசேட வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேசிய சிறுவர் நலன்புரி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சு, பொலிஸ் மற்றும் ஏனைய திணைக்களங்களுடன் கலந்தாலோசித்து இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அதன் தலைவர் உதய குமார குறிப்பிட்டார். (அ)

# வடக்கு, கிழக்கில் கடும் மழை 4 நாட்கள் மக்களே அவதானம்!

கொழும்பு, டிசெ. 20

வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஏற்படுவதால் எதிர்வரும், நான்கு தினங்கள் மழையும் பலமான காற்றும் வீசக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதால் மக்கள் மிக அவதானமாக இருக்கவேண்டும் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போது வங்காள விரிகுடாவில் உருவாகி வருகின்ற தாழமுக்கம் காரணமாக நேற்று முதல் வியாழக்கிழமை அதிகளவான மழை வீழ்ச்சியும் பலத்த காற்றும் வீசக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மக்கள் இவ்விடயத்தில் மிக அவதானமாக இருப்பதுடன் தங்கள் கால்நடைகளை இக்காலப் பகுதிகளில் மிகவும் அவதானமாக பராமரிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடற்தொழிலில் ஈடுபடுபவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்க்கும்படியும் அல்லது அவதானமாக இருக்குமாறும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.(அ)

## எக்ஸ்பிரஸ் பேர்ள் பேரழிவு:
# இழப்பீடு 3 பில்லியன் டொலரை இழக்கும் அபாயத்தில் இலங்கை

கொழும்பு, டிசெ. 20

இலங்கை எதிர்கொண்ட எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் பேரழிவால் ஏற்பட்டுள்ள, சுற்றுச்சூழல் பாதிப்புகளை விபரிக்கும் நிபுணர் குழுவால் தொகுக்கப்பட்ட இறுதி அறிக்கையை மூன்று வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம், நீதி அமைச்சகம் கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையகத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த காலக்கெடுவுக்குள், அறிக்கையை சமர்ப்பிக்காது விட்டால், இழப்பீடான 3 பில்லியன் அமெரிக்க டொலர்களை இழக்கும் அபாயம் உள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இந்த வாரம் பாராளுமன்றத்தில், நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில், நீதி அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சுற்றுச்சூழல் ஆணையக பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

கடல்சார் பேரழிவு தொடர்பான அறிக்கை இலங்கையின் மிக மோசமான கடல்சார் பேரழிவு தொடர்பாக, நட வடிக்கை எடுக்கவேண்டுமானால், அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிக்கை தேவை என்று அமைச்சர் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

முன்னதாக சுற்றுச்சூழல் ஆணையகம், கடந்த செப்ரெம்பர் 19 க்குள், குறித்த அறிக்கையை நீதி அமைச்சகத்திடம் ஒப்படைக்க ஒப்புக்கொண்டது, ஆனால் இந்த காலக்கெடுவை தவறவிட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த வாரம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது, ஜனவரி நடுப்பகுதிக்குள் அறிக்கையை ஒப்படைக்கலாம் என ஆணையக அதிகாரிகள் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆணையகம், இறுதி அறிக்கையை நீதியமைச்சகத்திற்கு அனுப்பாமல் முதலில் சட்ட ஆலோசகராக பணியமர்த்தப்பட்ட அவுஸ்திரேலிய நிறுவனத்திற்கு அனுப்பியது குறித்தும் நீதி அமைச்சர் இந்த வார கூட்டத்தின் போது தமது எரிச்சலை வெளிப்படுத்தினார்.

அறிக்கை முதலில் நீதி அமைச்சகத்திற்கு வந்திருக்க வேண்டும். பின்னர் அது சட்டமா துறைக்கு அனுப்பப்பட வேண்டும். அதுதான் செயல்முறையாக இருக்கும்.

எனினும் இந்த அறிக்கையை முதலில் வெளிநாட்டு சட்ட நிறுவனத்திற்கு அனுப்பி பரிந்துரைகளைக் கேட்பது மிகவும் சந்தேகத்திற்குரியது மற்றும் இது வேண்டுமென்றே தாமதப்படுத்தும் தந்திரம் என்ற கவலையை ஏற்படுத்து கிறது என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்ட நடவடிக்கையை தாக்கல் செய்வதில் தாமதம் ஏற்பட்டால், 3 பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பீடு கோருவதற்கான வாய்ப்பை இலங்கை இழக்க நேரிடும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, இந்த கூட்டத்தில் கருத்துரைத்த, சுற்றுச்சூழல் ஆணையகத்தின் தலைவி தர்ஷனி லஹந்தபுர, சிங்கப்பூர்க் கொடியுடன் சென்ற கப்பல் மூழ்கியதால் இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் வரை ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து அவுஸ்திரேலிய சட்ட ஆலோசகரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை விரிவானது என குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பாலான குப்பைகள் தொடர்ந்து கடலுக்கு அடியில் உள்ளன. இடிபாடுகளை அகற்றுவதற்கான மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

எனவே சிதைவு முழுமையாக அகற்றப்படும் வரை சேதம் குறித்த இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க முடியாது என்பதே தமது மதிப்பீடாகும் என்று அவர் தெரிவித்தார். (அ)

# 8 ரூபாயிலிருந்து 50 ரூபாயாக அதிகரிக்கும் மின் கட்டணம்!

கொழும்பு, டிசெ. 20

புதிய மின்சார விலைச் சூத்திரத்தின் படி முதல் 30 மின் அலகுகளுக்கான கட்டணம் 8 ரூபாவிலிருந்து 50 ரூபாவாக அதிகரிக்கப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கச் செயலாளர் ஆனந்த பாலித தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின் கட்டண திருத்த யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி முதல் 30 அலகுகளுக்கான அலகு கட்டணம் 8 ரூபாயிலிருந்து 50 ரூபாயாக அதிகரிக்கவுள்ளது. 1,500 ரூபாய் நிலையான கட்டணங்களாகும்.

அதாவது 30 அலகுகளைப் பயன்படுத்துபவர் 3,000 ரூபாய் செலுத்த வேண்டும். மின் கட்டணம் மும்மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இது கறுப்புச் சந்தையைத் தாண்டிய விலை உயர்வு. மின் உற்பத்தி நிலையங்களை வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கு விற்கும் நோக்கத்தில் இந்த விலை உயர்வு செய்யப்படுகிறது - என்றார். (அ)

# தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் செயல்பாட்டில் தலையிடவில்லை!

கொழும்பு, டிசெ. 20

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடு களில் அரசாங்கம் தலையிடவில்லை என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல்கள் ஆணைக்குழு ஒரு சுயாதீனமான அமைப்பாகும். தேர்தலை நடத்துவதற்கான முழு அதிகாரமும் அதற்கு உண்டு.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடு அதன் செயல்பாட்டில் அரசாங்கம் தலையிடாது- என்றார்.

இதேவேளை, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு இன்று செவ்வாய்க்கிழமை கூடவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திகதி மற்றும் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்கும் திகதிகள் குறித்து கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# நாடு திரும்பும் ஹனா சிங்கர் ஜனாதிபதியைச் சந்தித்தார்

கொழும்பு, டிசெ. 20

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கர் தனது பதவிக்காலம் முடிந்து நாடு திரும்பும் நிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை நேற்று முற்பகல் சந்தித்தார்.

ஹனா சிங்கருடன் சிநேக பூர்வமாக உரையாடிய ஜனாதிபதி, இலங்கைக்காக அவர் ஆற்றிய சேவைகளுக்கு நன்றி தெரிவித்ததுடன், அவரது எதிர்கால பணிகளுக்காக வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

ஹனா சிங்கர், 2018 செப்ரெம்பர் 07 ஆம் திகதி முதல் இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட இணைப்பாளராக செயற்பட்டார். (அ)

# ஆட்கடத்தல் விசாரணைகளுக்காக ஓமானுக்கு சென்ற குழு திரும்பியது

கொழும்பு, டிசெ. 20

ஆட்கடத்தல் தொடர்பான விசாரணைகளுக்காக துபாய் மற்றும் ஓமான் நோக்கி பயணித்திருந்த விசாரணை குழு நாடு திரும்பியுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் 02 அதிகாரிகளும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தை சேர்ந்த 04 அதிகாரிகளும் கடந்த 10ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்பட்டிருந்தனர்.

இதேவேளை, சுற்றுலா விசா மற்றும் பணியகத்தில் பதிவு செய்து பணியாளர்களாக சென்று பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளான 30 பெண்கள் ஓமான் பாதுகாப்பு இல்லத்திலும் சுமார் 60 பேர் துபாய் பாதுகாப்பு இல்லத்திலும் தங்க வைக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர், பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் தெரிவித்தார். (அ)

# ரணில் - சொல்ஹெய்ம் - பிரபா கூட்டை நாம் தோற்கடித்தோம்!

## கூறுகின்றார் சுனில் ஹந்துன்நெத்தி

கொழும்பு, டிசெ. 20

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் சுனாமி நிவாரண சபையை எதிர்த்ததன் காரணமாகவே அன்றைய அரசாங்கத்தில் அமைச்சர்களாக பதவி வகித்த தமது கட்சியினர் அதில் இருந்து வெளியேறியதாக மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் சபை உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

அன்று அரசாங்கத்தில் நான்கு அமைச்சுப் பதவிகளை வகித்த மக்கள் விடுதலை முன்னணியினர் என்ன செய்தனர் என்று கேட்பவர்களுக்கு இதுவே பதில் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை பிரிக்கவே அன்று நோர்வேயின் எரிக் சொல்ஹெய்ம், வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் தற்போது புண்ணியத்தில் ஜனாதிபதி பதவிக்கு வந்துள்ள ரணில் விக்கிரமசிங்க உடன்படிக்கையை செய்து கொண்டார் என்பது நாட்டில் உள்ள பலருக்கு தெரியாது.

அப்படியான வரலாற்றை கொண்ட ரணில் விக்கிரமசிங்கவை தற்போது சிலர் தமது வீரராக மாற்றிக்கொண்டிருப்பது கேலிக்குரியது. எரிக் சொல்ஹெய்ம் தற்போது



ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச சூழலியல் தொடர்பான ஆலோசகராக இருக்கின்றார்.

நாங்கள் நான்கு அமைச்சுப் பதவிகளை பெற்று என்ன செய்தோம் என்று கேட்கின்றனர். நானும் பிரதியமைச்சராக பதவி வகித்தேன். நாங்கள் கூட்டணி ஒன்றையும் அமைத்தோம். நாங்கள் அமைச்சுப் பதவிகளுக்கு பேராசையில் அதனைச் செய்யவில்லை.

எனினும் நாட்டுக்காக எமக்கு அரசாங்கத்தில் இருந்து வெளியேற நேரிட்டது. சந்திரிகா சுனாமி நிவாரண சபையை கொண்டு வந்தார்.

அதேபோல் 2003 ஆம் ஆண்டில் எரிக் சொல்ஹெய்ம், பிரபாகரன் ஆகியோர் உடன்படிக்கைகளை ஏற்படுத்தினர். ரணிலை ஜனாதிபதியாக பதவியில் அமர்த்தி, பிரபாகரன் மீசையை மழித்து கோட்சூட் அணிந்து நாட்டை பிரிக்கும் இடத்தை நோக்கி வரவே உடன்படிக்கையின் மூலம் முயற்சித்தனர்.

அன்று நாங்கள் ரணில் மற்றும் பிரபாகரன் ஆகிய இரண்டு பேரின் முயற்சிகளையும் தோற்கடித்தோம். அன்று மகிந்த ராஜபக்ஷ, தற்போது பிரதமராக பதவி வகிக்கும் தினேஷ் குணவர்தன, மைத்திரிபால சிறிசேன, கண், காதுகளை மூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

நாட்டுக்காக நாங்கள் சந்திரிகாவின் அரசாங்கத்தில் இருந்து வெளியேறினோம். தெரியாதவர்கள் இதனை தெரிந்துக்கொள்ளவேண்டும்.

ரணில், மகிந்த, பஸில், நாமல் போன்றவர்களுக்கு நாட்டு மக்களின் மூச்சு விடும் உரிமையை இல்லாமல் செய்ய இடமளிக்க முடியாது - என்றார். (அ)

# சர்வதேச மனித உரிமை பிரகடனம்

# இலங்கையில் தாக்கம் செலுத்தியிருக்கிறதா?

-ச. வி. கிருபாகரன்

ஒரு அரசியல் தீர்வை எட்டுவதற்கு அக்கறையுள்ள எவருக்கும், எழுபத்து நான்கு வருடங்கள் குறுகிய காலம் அல்ல! வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இலங்கையின் ஆட்சியாளர்கள், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு மேலாக தமிழர்களையும், சர்வதேச சமூகத்தையும் முட்டாளாக்குவதற்கான வழிகளை மட்டுமே தேடுகிறார்கள் என்பதே யதார்த்தம்-உண்மை.

உலகெங்கிலும் உள்ள கொடூரமான மனித உரிமை மீறல்களுக்கான முக்கிய காரணங்களில் ஒன்று, சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்துவதற்கான போராட்டங்களுக்கு எதிரான ஒடுக்கு முறையாகும்.

சர்வதேச மனித உரிமை பிரகடனத்தின் எழுபத்தி நான்காவது (74) ஆண்டு நிறைவு - டிசம்பர் 10 ஆம் திகதி அன்று கொண்டாடப்படும். இந்த கொண்டாட்டம் நடைபெறும் அதேவேளையில், எழுபத்தைந்தாவது (75) ஆண்டின் கொண்டாட்டத்திற்காக - ஐக்கிய நாடுகள் சபை முதல் நாடுகள் ரீதியாக, அரசு சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நபர்கள் கொண்டாடுவதற்கு ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றது.

### ஐ.நா.வும் மனித உரிமை பிரகடனமும்

ஐ. நா. சாசனம் 26 ஜூன் 1945 அன்று சான் பிரான்சிஸ்கோவில் நடந்த ஐ.நா மாநாட்டில் 50 நாடுகளால் கையெழுத்திடப்பட்டது. ஆனால் ஐ.நா அதிகாரபூர்வமாக 24 அக்டோபர் 1945 அன்று ஐந்து பெரிய நாடுகளான பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, சோவியத் யூனியன் (இன்று ரஷ்யா) மற்றும் சீனா (இன்றைய சீனக் குடியரசு அல்லது தைவான்) ஐ. நா. சாசனத்தை அங்கீகரித்தது. ஐக்கிய நாடுகள் சபை அக்டோபர் 24ஐ ஐ.நா.தினமாகக் கொண்டாடுகிறது.

சர்வதேச மனித உரிமை பிரகடனம் அல்லது சாசனம் 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையால், பாரிஸில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அன்றிலிருந்து இந்த நாள் "சர்வதேச மனித உரிமைகள் தினமாக" உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

சர்வதேச மனித உரிமை பிரகடனம் அல்லது சாசனம் முப்பது சாரங்களைக் கொண்டுள்ளது. சாரம் 1 மற்றும் 2 இன் தத்துவக் கோரிக்கையை கோடிட்டுக் காட்டுகின்றன.மேலும் மனிதர்கள் சமமான கண்ணியத்தில் சுதந்திரமாக பிறக்கிறார்கள் மற்றும் எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் அனைத்து உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கு உரிமையுடையவர்கள் என்பதை வலியுறுத்துகின்றன. சாரம் 3 முதல் 21 வரையிலான குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் மற்றும் சாரம் 22 முதல் 27 வரை பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றி கூறுகின்றன. 28 மற்றும் 29 சாரம்களின் முடிவு ஜனநாயக சமூகத்தில் தனிநபரின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை வலியுறுத்துகிறது. இறுதியாக, சாரம் 30ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அழிக்கும் நோக்கில் எதையும் செய்ய ஒரு நபர் அல்லது குழுவிற்கு எந்த உரிமையும் உள்ளது என்று விளக்கப்படக்கூடாது என்று எச்சரிக்கை அறிவிப்பு கொடுக்கிறது.

சிறிலங்காவில் மனித உரிமை தினம் ஒவ்வொரு வருடமும் வந்து செல்கிறது. ஆனால் சர்வதேச மனித உரிமை பிரகடனம் சிறிலங்காவில் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறதா? 2009 மே மாதப் போரின் இறுதி நாட்களில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் போனவர்களுக்காக விசாரணை மற்றும் பொறுப்புக்கூறல் அடிப்படையில் அரசாங்கம் என்ன செய்துள்ளது? யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் இன்று என்ன நடக்கிறது? தெற்கில் - 1971 மற்றும் 80களின் பிற்பகுதியில் ஜே.வி.பி.யின் எழுச்சியின் போது இடம்பெற்ற காணாமல் போனவர்கள் - ஜே.வி.பி.யின் தலைவர் ரோஹண விஜேவீர உட்பட பலர் தன்னிச்சையாக கொல்லப்பட்டது பற்றி என்ன செய்துள்ளார்கள்.



யுத்தம் முடிவடைந்து பதின் மூன்று வருடங்களுக்குப் பின்னரும் - நில அபகரிப்பு, கட்டாய மத நினைவுச்சின்னங்களை நடுதல், கட்டாயக் குடியேற்றம் மற்றும் பல அழிவுகள் வடக்கு மற்றும் கிழக்கில் தற்பொழுதும் தொடர்கின்றன. சிலர் கூறுவது போல், தமிழ் மக்கள் பயங்கரவாதத்தின் பிடியில் இருந்து காப்பாற்றப்பட்டிருந்தால், இன்றும் ஏன் இந்த மோதலும், பாகுபாடும், துன்பமும் தொடர வேண்டும்? போர் உச்சகட்டத்தில் இருந்த காலத்தில் சர்வதேச சமூகத்திற்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் என்னவாயிற்று?

மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் தலைமைத்துவம் தொலைநோக்குப் பார்வையும் அர்ப்பணிப்பும் இல்லாத போது, இலங்கையில் உள்ள மக்களின் இதயங்களிலும் மனங்களிலும் அதை ஊக்குவிக்காதபோது, குடிமக்கள் தங்கள் பிறப்புரிமைகளை நிலைநிறுத்துவதற்கு எந்த விலை கொடுத்தாலும் குரல் எழுப்புவார்கள் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் வயது, பாலினம், இனம், இனம், மதம், தேசியம் மற்றும் பிராந்திய வேறுபாடுகள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் சுதந்திரம், கண்ணியம், சமத்துவம் மற்றும் நீதியை உத்தரவாதம் செய்கிறது.

புத்த பகவான் இந்துவாகவே பிறந்தார் என்பதை இலங்கையில் சிலர் இன்றுவரை உணரவில்லை. ஒரு கடற்படை அரசியல் பிரமுகர் தன்னை புத்த சாசனத்தின் பாதுகாவலராக சித்தரிக்க முயற்சிப்பது முற்றிலும் அரசியல் நோக்கத்திற்காகவே. சமத்துவத்திற்கு மதிப்பு கொடுக்காது, மதுவின் சுவை உட்பட மாட்டுக்கறியையும் மற்ற அசைவத்தையும் சாப்பிடுபவர்,எப்படியாக புத்த சாசனத்தின் கற்பனையான பாதுகாவலராக தன்னும் இருக்க முடியும்? புத்தபெருமானின் பெயரால் பலர் சிறிலங்காவில் கபட நாடகம் ஆடுகிறார்கள் என்பதே உண்மை.

### நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை

தென்னாபிரிக்காவின் முன்னாள் தலைவர் நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை உலக அரசுகளிற்கு ஓர் அருமையான ஊதாரணமாக இருந்து வருகிறது. எண்ணிக்கையில் பெரும்பான்மையாக உள்ள ஒரு மக்கள் எவ்வாறு எண்ணியல் சிறுபான்மையினரை திருப்திப்படுத்தலாம், மற்றும் இணைந்து வாழலாம் என்பதை உலகுக்கு முன்னுதாரணமாக விளங்கியவர் நெல்சன் மண்டேலா.

இவ்வாறான அரசியல் - சகவாழ்வு சிறிலங்காவின் அரசியல் தலைவர்களுக்கு நியாயமானதும், சமத்துவமானதுமான, தீர்வைக் காண்பதற்கான மனவலிமை இல்லாதது மட்டுமன்றி, இலங்கையில் உள்ள பௌத்த மேலாதிக்கம் சகவாழ்வை திட்டவட்டமாக நிராகரிக்கிறது.

தென்னாபிரிக்காவில் - 2001ல், இன வெறிக்கு எதிரான ஐ.நா. உலக மாநாட்டின் போது, எங்கள் அமைப்பான 'தமிழ் மனித உரிமைகள் மையம்' தென்னாபிரிக்க அமைச்சர்களையும் முக்கிய புள்ளிகளையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் எம்மினால் ஒழுங்கு செய்யப்பட்ட கண்காணிப்பில் எங்களுடனான ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தினர் அன்றைய தென்னாபிரிக்காவிற்கான இலங்கைத் தூதரக ஊழியர்கள் மற்றும் இன்றைய எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்லவும் எமது கண்காணிப்பை பார்வையிட்டனர். அவர்கள் வடக்கு, கிழக்கு நிலைமைகள் பற்றிய விடயத்தில் என்னுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஒரு கட்டத்தில், கிரியெல்ல, தான் தமிழர்களுக்கான ஒரு அரசியல் தீர்வொன்றை முன்னெடுப்பதாக அன்று என்னிடம் கூறியது இன்றும் எனக்கு நினைவிருக்கிறது. இப்போது இருபத்தி இரண்டு வருடங்கள் கடந்தும் இவ் இனப்பிரச்சினைக்கான தீர்வு எங்கே?

ஒரு அரசியல் தீர்வை எட்டுவதற்கு அக்கறையுள்ள எவருக்கும், எழுபத்து நான்கு வருடங்கள் குறுகிய காலம் அல்ல! வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இலங்கையின் ஆட்சியாளர்கள், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு மேலாக தமிழர்களையும், சர்வதேச சமூகத்தையும் முட்டாளாக்குவதற்கான வழிகளை மட்டுமே தேடுகிறார்கள் என்பதே யதார்த்தம்-உண்மை.

### சுயநிர்ணய உரிமை

உலகெங்கிலும் உள்ள கொடூரமான மனித உரிமை மீறல்களுக்கான முக்கிய காரணங்களில் ஒன்று, சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்துவதற்கான போராட்டங்களுக்கு எதிரான ஒடுக்கு முறையாகும்.



சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கையிலும் - மற்றும் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையின் சாரம் 1 (ஒன்று) கூறுவது என்னவெனில், "எல்லா மக்களுக்கும் சுய நிர்ணய உரிமை உள்ளது. அந்த உரிமையின் மூலம் அவர்கள் தங்கள் அரசியல் அந்தஸ்தை சுதந்திரமாக நிர்ணயம் செய்து, தங்கள் பொருளாதார, சமூக மற்றும் கலாசார வளர்ச்சியை சுதந்திரமாகப் பின்பற்றுவார்கள்.

நடைமுறையில் படிப்படியாக சாரம் 1 வலுவிழந்து வருகிறது. இது மனித உரிமை சபையின் நிகழ்ச்சி நிரலில் அறவே கிடையாது, ஏனெனில், பாதுகாப்பு சபையின் ஐந்து நிரந்தர உறுப்பினர்களான அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இந்த சாரம் ஒன்று பல சர்ச்சைகளை ஏற்படுத்துகிறது.

அமெரிக்காவில் அலாஸ்கா, ஹவாய் மற்றும் போர்ட்டோ ரிக்கோ மக்கள் சுயநிர்ணய உரிமைக்காக போராடுகிறார்கள். ஐக்கிய இராச்சியத்தில் - வட அயர்லாந்து அரசியல் நெருக்கடி இன்னும் தீர்க்கப்படவில்லை. இதே வேளை, ஸ்கொட்லாந்து வேல்ஸ் ஆகியவை தமது சுயநிர்ணய உரிமைக்காக போராடுகிறார்கள். பிரான்சில் கோசிக்கா மற்றும் பிரித்தான் மக்கள் தங்கள் அரசியல் உரிமைகளைக் கோருகின்றனர். ரஷ்யா மற்றும் சீனாவில் - சேச்சினிய, தீபேத், ஊகீர் (கிழக்கு துர்கெஸ்தான்) மக்கள் போன்று பலர் தங்கள் சுயநிர்ணய உரிமைக்காக போராடுகிறார்கள். இத்தகைய சூழ்நிலைகளில், சுயநிர்ணய உரிமை பற்றிய கேள்வி தொடர்பான சர்வதேச சட்டம் சக்தியற்று காணப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு ஐ.நா.வின் தீர்மானங்கள் மூலமாக எரித்தேரியா, கிழக்கு-திமோர், தெற்கு சூடான் ஆகிய நாடுகள் புதிதாக உருவாகின. கொசோவோ நாட்டின் தோற்றம் என்பது, வெற்றிகரமான ராஜதந்திரம் மட்டுமல்லாது, பெரிய வல்லரசு அல்லது பலம் படைத்த நாடுகள் மூலம் கிடைக்க பெற்ற வெற்றியாகும்.

இத்தனை தடைகளையும் மீறி, மனித உரிமைகளை மீறும் நாடுகளை "பெயரிட்டு வெட்கப்படுதல்" என்ற செயற்திட்டம் மூலம் மனித உரிமைக்காக உண்மையில் உழைக்கும் நிறுவனங்களும் செயற்பாட்டாளர்களும் வெற்றி கண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிலர் அரசாங்கங்களின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றால் போல், மிகவும் கபடமாக பாதிக்கப்பட்டவர்களை மனித உரிமை வேலையென கூறி, ஏமாற்றி பெரும் தொகையான பணம் சம்பாதிப்பதையும் நாம் காணக்கூடியதாகவுள்ளது. இது ஒரு சர்வதேச கிறீமினல் குற்றம். இப்படியாக சில வருடங்களாக ஐ.நா. மனித உரிமை சபையில் வேலைகளை மேற்கொண்ட ஒரு தமிழ் நபர், ஜெனிவா ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையினால், சில வருடங்களிற்கு முன்பு வெளியேற்றப்பட்டுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறிலங்காவில் தமிழர்களின் ஆள் கடத்தலை ஆய்வு செய்யும் போது, இவை யாவும் சிறிலங்காவில் தமிழர் சனத்தொகையைக் குறைக்கும் அரசியல் நிகழ்ச்சி நிரல் என்பது தெளிவாகிறது. இது ஒரு சர்வதேச கிறீமினல் குற்றம். இவற்றின் அடிப்படையில், முதற்கட்டமாக, காவல்துறையும் மற்ற அரசு படைகளும் இடைத்தரகர்களாக தமிழர்களை எந்தவித காரணமுமின்றி அன்றாடம் துன்புறுத்துகின்றனர்.

அவர்கள் தினசரி துன்புறுத்தலை எதிர்கொள்ளும் அதே வேளையில், ஆள்கடத்தல்களை புரியும் தொழிலதிபர்களின் மற்றொரு குழு, பெருமளவிலான வெளிநாட்டு அல்லது உள்ளூர் பணத்துடன் மக்களை ஆட் கடத்தலை நோக்கி வேட்டையாடுகின் றனர். இவ்வேளை அரசின் மறைமுறை உதவியோடு, அரசிற்கு நெருக்கமாகப் பணிபுரியும் நபர்கள், போக்குவரத்தை ஏற்பாடு செய்து, தமிழர்களை நடுக்கடலில் கைவிடுகின்றனர்.

இவ் நிலையில் மனிதாபிமான அடிப்படையில் சில நாடுகள் அவர்களை காப்பாற்றுகிறது. தமிழர்கள் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு ஆள் கடத்தலிலும் இது நிருபண மாகியுள்ளது. தமிழர்களை தங்கள் குடிமக்களாகக் சிறிலங்கா அரசு கருதினால், இந்த விவகாரத்தில் இலங்கை அரசு ஏன் கவனம் செலுத்தவில்லை என்பதுதான் பதில் காண முடியாத ஒரு கேள்வி.

ஈழநாடு



# புதுவையில் தி.மு.கவின் தொய்வு எப்படித் தொடங்கியது?

## மீண்டும் அது முன்னிலை பெறுமா?

- நடராஜன் சுந்தர்





புதுச்சேரியில் பலமுறை ஆளும் கட்சியாகவும், காங்கிரசுக்கு பிரதான போட்டியாளராகவும் இருந்துவந்த திமுக சிறிது சிறிதாக புதுச்சேரியின் அதிகாரப் போட்டிக்கான உரையாடலில் இருந்து காணாமல் போயிருந்தது. புதுவை அரசியல் பரபரப்பான புதிய திசையில் போய்க் கொண்டிருக்கும் நிலையில் திமுக சோம்பல் முறித்துக்கொள்ளுமா? அதன் அரசியல் எதிர்காலம் எப்படி இருக்கும்?

தமிழ்நாட்டில் அதிகாரத்தில் பங்கு கோராத காங்கிரசுக்கு, புதுவையில் அதிகாரத்தை விட்டுக்கொடுத்து ஈடு செய்துவந்த திமுக, அதே அணுகுமுறையை நீண்ட காலம் கடைபிடித்த நிலையில் அந்தக் கட்சி யூனியன் பிரதேசத்தில் தொய்வை சந்திக்கத் தொடங்கியது. ஆனால், காங்கிரசுக்குள்ளேயே பிளவு ஏற்பட்டு இரண்டு போட்டி முகாம்கள் உருவானது, பிறகு புதுவையில் தங்கள் இருப்பைக் காட்டுவதற்கு பாஜக முனைப்பு காட்டியது என்று அரசியல் வேறுவிதமாக நகரத் தொடங்கிய நிலையில், ஆட்சிக்கான முனைப்பில்லாத ஒரு கட்சிக்கு அரசியல் பொருத்தமே இல்லாமல் போகும் அபாயம் உருவானது.



இந்நிலையில்தான் ஒரு திருமண விழாவில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசிய ஒரு பேச்சு மந்தகதியில் போய்க் கொண்டிருந்த புதுவை அரசியலின் இரண்டு முகாம்களிலும் இரண்டு விதமான சலசலப்புகளை உண்டாக்கியது.

ஒருபுறம், முதல்வர் ரங்கசாமி பொம்மையாக செயல்படுகிறார், ஆளுநரே அதிகாரம் செலுத்துகிறார் என்று கூறியதன் மூலம் தனது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் அதிகாரம் சிறுமைப்படுவது குறித்துப் பேசியாகவேண்டிய நெருக்கடி முதல்வர் ரங்கசாமிக்கு ஏற்பட்டது.

புதுவைக்கு உண்மையான சுதந்திரம் கிடைக்கவே இல்லை, அதிகாரிகள் மதிப்பதில்லை என்று ரங்கசாமி பேசி பரபரப்பை ஏற்படுத்தினார்.

இன்னொரு புறம் புதுவையில் திமுக ஆட்சி வரும் என்பதாக மு.க.ஸ்டாலின் தமது உரையில் குறிப்பிட்டது, எதிர்க்கட்சி முகாமான திமுக - காங்கிரஸ் முகாமுக்குள்ளும் கூட்டணியின் தலைமை இனி யார் என்ற கேள்வியின் விதையைத் தூவியது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், 1969, 1980, 1990, மற்றும் 1996 என நான்கு முறை திமுக ஆட்சியைப் பிடித்துள்ளது.

கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் என்.ஆர். காங்கிரஸ் - பாஜக கூட்டணியை எதிர்த்து காங்கிரஸ் - திமுக கூட்டணி 30 இடங்களில் போட்டியிட்டு 8 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. இதில் திமுக பெற்ற இடங்கள் 6, காங்கிரஸ் பெற்ற இடங்கள் வெறும் 2 மட்டுமே. அதிலும் குறிப்பாக, தேர்தல் தொகுதிப் பங்கீட்டின்போது கடும் போட்டிக்குப் பிறகு அதிக இடங்களைப் பெற்றுப் போட்டியிட்டது காங்கிரஸ்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் முடிவுக்குப் பிறகு 6 இடங்கள் பெற்ற திமுக பிரதான எதிர்க்கட்சியாக உருவானது. அடுத்த ஓராண்டில் மக்களவைத் தேர்தல் வரவுள்ள நிலையில், கூட்டணிக்குத் தலைமை காங்கிரசா, திமுகவா என்ற கேள்வி மீண்டும் எழுந்துள்ளது.

இந்த சூழலில்தான் அடுத்து வரும் சட்டமன்றத் தேர்தலில் புதுச்சேரியில் திமுக தலைமையில் திராவிட மாடல் ஆட்சி வர வேண்டும் என்ற முனைப்புனுடன் பணியாற்ற வேண்டும் என்று திமுக தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் பேசியுள்ளார்.

**திமுக வளர்ச்சியும் வீழ்ச்சியும்**

புதுச்சேரியின் சட்டமன்ற வரலாறு 1963ல் தொடங்கியது. அப்போது இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட காங்கிரஸ் கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் செல்வாக்கு மிக்க தலைவர்கள் இருந்தனர். அப்போது இந்த இரண்டு கட்சிகளுமே முதன்மையான அரசியல் கட்சிகளாக இருந்தன. ஆனால் 1967ல் தமிழ்நாட்டில் ஆட்சியைப் பிடித்த திமுக புதுச்சேரியிலும் புது வேகத்தில் வளர்ந்தது. 1969ல் ஆட்சியையும் கைப்பற்றியது. அதன் பிறகு திமுக மீண்டும் 1980 மற்றும் 1990ல் வெற்றிபெற்றது.

1993ஆம் ஆண்டு திமுக பிளவுபட்டு மதிமுக உதயமானது. அந்த சமயத்தில் முன்னாள் முதல்வர் ஜானகிராமன் மாநில பொறுப்பாளராகவும் சட்டமன்ற திமுக குழு தலைவராகவும் நியமிக்கப்பட்டார். அப்போது கட்சியின் யூனியன் பிரதேச அமைப் பாளராக முன்னாள் முதல்வர் டி.ராமசந்திரன் இருந்தார். ஆனால், கட்சிக்குள் ராமச்சந்திரன் செல்வாக்கு சரிந்து 1994ல் அவர் அதிமுக சென்றார். முதலில் மதிமுக பிளவு, பிறகு ராமச்சந்திரன் மூலம் இன்னொரு பிளவு என்று அடுத்தடுத்து புதுவை பிரதேச திமுக இரண்டு பிளவுகளை சந்தித்தது.

அப்போது ஜானகிராமன் திமுகவின் யூனியன் பிரதேச அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

அவர் தொகுதி வாரியாக கட்சி வளர்ச்சிப் பணியை மேற்கொண்டார். 1996ல் திமுக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணி வெற்றிபெற்று, திமுக தலைமையில் ஆட்சி நடைபெற்றது. அதன் பிறகு நடந்த சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் 9 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. அப்போது திமுக 8 இடங்களில் வெற்றி பெற்றது.

**திமுக சரிவுக்குக் காரணம் என்ன ?**

புதுச்சேரியில் திமுக எதனால் சரியத் தொடங்கியது என்பது குறித்து திமுகவின் முன்னாள் இளைஞரணி செயலாளர் ஜெவிஎஸ்.ஆர்.ராமலிங்கம் கூறுகையில், ‘புதுச்சேரியில் எதிரும் புதிருமாக இருந்த காங்கிரஸ் - திமுக ஆகிய இரண்டும் தங்கள் தலைமைகளின் கட்டளைப்படி, 2004 நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணி சேர்ந்தன. பிரதான போட்டியாளர்களான இரண்டு கட்சிகளுமே கூட்டாளிகளாக மாறின. தமிழ்நாட்டில் திமுக தலைமை வகித்தது. புதுவை யில் காங்கிரஸ் தலைமை தாங்க, திமுக அடுத்த நிலைக்கு சென்றது. அப்போது தான் திமுகவின் வீழ்ச்சி தொடங்கியது.

பின்னர், 2006 சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் தலைமையில் கூட்டணி உறுதியானதால், திமுக தொண்டர்கள் சோர்வடையத் தொடங்கினர். தொடர்ச்சியாக 2006, 2011, 2016 என அடுத்தடுத்த தேர்தல்களிலும் கூட்டணியில் திமுக இரண்டாம் நிலைக் கூட்டாளியானது. இதனால், திமுகவுக்கு புதியவர்களை ஈர்க்க முடியாமல் போனது. இதனால் திமுக தொண்டர்கள் மேலும் சோர்வடைய ஆரம்பித்தனர். இதனால்தான் திமுக வளர்ச்சி குறையத் தொடங்கியது,” என்றார் அவர்.

தொடர்ந்து பேசிய அவர், ‘நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் புதுச்சேரி திமுக-வின் வடக்கு, தெற்கு, காரைக்கால் மாவட்ட அமைப்பாளர்கள் சரியாக கூட்டணி பேசியிருந்தால் 12 இடங்களைக் கைப்பற்றி இருக்கலாம். அது தவறியதால் 6 இடங்கள்தான் கிடைத்தது. ஏறக்குறைய 12 தொகுதிகளில் திமுக வெற்றிபெறும் சூழல் இருந்தும் சரியான முறையில் இடம் மற்றும் வேட்பாளர் தேர்வு செய்யாததால், வெற்றி 6 தொகுதிகளாகச் சுருங்கி விட்டது. தன்னு டைய வளர்ச்சியை ஒற்றுமை இல்லாததால் திமுக தானே குறைந்து கொண்டது,” என்கிறார் ராமலிங்கம்.

**திமுக மீண்டு வர முடியுமா ?**

‘திமுக மீண்டும் வளர்ச்சி பெறவேண்டுமானால் பெரும்பான்மை சாதிகளுக்கு கட்சியினுடைய தலைமை பதவிகளை அதிகம் அளிக்க திமுக தலைமை முன்வரவேண்டும். புதுச்சேரியைப் பொறுத்தவரை வன்னியர்கள், மீனவர்கள், தலித்கள் என மூன்று பெரும் சாதிகள் உள்ளன. இந்த சமூகங்களை சேர்ந்த மக்களுக்கு எந்தவிதமான வாய்ப்புகளும் தொடர்ந்து அளிக்கப்படுவதில்லை.

தற்போது பாஜக, என்.ஆர்.காங்கிரஸ் கட்சிகளின் வளர்ச்சி அவர்கள் பெரும்பான்மை சமூகங்களுக்கு மதிப்பு அளித்ததால் ஏற்பட்டது.

திமுகவில் அதுபோன்ற சூழ்நிலை ஏற்படாத வரையில், கட்சியின் வளர்ச்சி கேள்விக் குறியாகத் தான் இருக்கும். திமுக - காங்கிரஸ் கூட்டணி தற்போது வரை சிறப்பான ஒரு கூட்டணியாகவே உள்ளது. ஆனால் புரிதல் இல்லாமல், கூட்டணிக்கு யார் தலைமை தாங்குவது என்ற போட்டி நிலவுவதால், இரண்டு கட்சிகளின் தலைமையும் இந்தப் பிரச்னையைப் பேசி சீர் செய்யவேண்டும்,” என்று கூறுகிறார் திமுக மூத்த உறுப்பினரான ராமலிங்கம்.

**கூட்டணிக்கு யார் தலைமை?**

‘காங்கிரஸ் 2 எம்.எல்.ஏ.க்களும், திமுக 6 எம்.எல்.ஏ.க்களும் பெற்றிருப்பதாக பிரித்துச் சொல்ல முடியாது. இந்த 8 எம்.எல்.ஏ.க்களுமே கூட்டணியின் எம்.எல்.ஏ.க்கள்தான். இவர்கள் தனித்தனியே போட்டியிட்டு வெல்லவில்லை. எனவே, சீட் யாருக்கு என்பதை தலைமை முடிவு செய்யும்,” என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்த்த முன்னாள் அரசு கொறடா அனந்தராமன் கூறுகிறார்.



‘புதுச்சேரியில் அடுத்து வரும் சட்ட மன்றத் தேர்தலில் திமுக ஆட்சியைப் பிடிக்கவேண்டும் என்ற நோக்கில் வேலை செய்து வருகின்றனர். அதற் கேற்ப தொகுதிவாரியாக ஆட்களை நியமிக்கும் பணியைத் தீவிரப்படுத்தி உள்ளனர். இது ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சிக்கு வருத்தத்தை அளித் துள்ளது. நமது இடத்தை திமுக பிடித்து விடுமோ என்ற அச்சம் காங்கிரசுக்கு உள்ளது. இதனாலேயே காங்கிரஸ் கட்சியினர் எங்கள் தலைமையிலேயே கூட்டணியும் ஆட்சியும் இருக்கும் என்று கூறி வருகின்றனர். இரண்டு கட்சிகளிலுமே அந்த கட்சியின் மத்திய தலைமையே முடிவுகளை எடுக்கின்றன என்று தெரிகிறது. இருவரும் பிரிந்தால் அவர்கள் இருவருக்குமே நல்லதில்லை. வரும் தேர்தலில் இருவரும் சரிசமமாக தொகுதிகளைப் பிரித்துக்கொண்டு பெரும்பான்மை அடிப்படையில் ஆட்சி செய்யலாம் என்ற முடிவை எடுப்பார்கள்.

புதுச்சேரியில் காங்கிரஸ் - திமுக பிரிந்து செயல்பட்டால், பாஜக ஆட்சிக்கு அவர்களே வழி வகுப்பதாக இருக்கும்,” என்று கூறுகிறார் அரசியல் ஆர்வலர் அருள்தாசன்.

# மகிந்தவின் கொள்கைகளை மொட்டு கட்சி நிராகரித்துள்ளது!

## ஜீ. எல். பீரிஸ் எம். பி. தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 20

பொதுத்தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியை புறக் கணிக்க வேண்டுமென நாடு முழுவதிலும் மகிந்த ராஜபக்ஷ பிரசாரம் செய்தார். அதனை ஏற்றே மொட்டுக் கட்சிக்கு 143 பாராளுமன்ற உறுப்பினர்களை மக்கள் அளித்தனர் என்று தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், மகிந்தவின் கொள்கைகளை மொட்டுக் கட்சி நிராகரித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான கூட்டணி தொடர்பில் ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே பேராசிரியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான மகிந்த ராஜபக்ஷ 2020ஆம் ஆண்டுக்கான பொதுத் தேர்தல் செயல்பாடுகளை முன்னெடுத்தார். அவரின் குரல் பதிவுகளை மீள கேட்க வேண்டும். அனைத்து பிரசாரக் கூட்டங்களிலும் நானும் கலந்துகொண்டிருந்தேன். ஐ.தே.க தொடர்பிலும் ஐ.தே.கவின் தலைவர் தொடர்பிலும் நாம் என்ன கூறினோம்? ஐ.தே.கவின் தலைவர் தொடர்பில் மஹிந்த கடும் வார்த்தைகளைக்கூடப் பயன்படுத்தியிருந்தார் என்றார்.

ஐ.தே.கவை முழுமையாக புறக்கணிக்க வேண்டும் என்றே நாம் அப்போது கூறினோம்.

இவ்வாறான நிலையில் பொதுஜன பெரமுனவினர் மனசாட்சியுடன் ஐ.தே.கவுடன் கூட்டணி அமைக்க முடியுமா?

மகிந்த ராஜபக்ஷ அன்று கூறிய கருத்துக்களுடனேயே நான் இப்போதும் இருக்கிறேன். நாங்கள் இருவரும் ஒன்றாக அமர்ந்து நாடு முழுக்க சென்றிருந்தோம். அன்றுபோல இன்றும் மகிந்தவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக சிறீ லங்கா பொதுஜன பெரமுன மகிந்தவின் கொள்கைகளை நிராகரித்துள்ளது - என்றும் கூறினார். (ஐ)

# மின் கட்டண உயர்வை எதிர்த்து போராட்டம்!



கொழும்பு, டிசெ. 20

மின்சார கட்டண உயர்வு மற்றும் அதனை நிறைவேற்ற துடிக்கும் ஊழல் அமைச்சர் மற்றும் அவர் உள்ளிட்ட தரப்பினரை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று கொழும்பில் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ஊழல் அமைச்சரை வெளியேற்றுவோம். இதன் மூலம் மின்சாரம் மற்றும் எரிசக்தி துறையை காப்பாற்றுவோம் என்று தெரிவித்து மின்சக்தி - எரிசக்தி அமைச்சு அலுவலகத்தின் முன்பாக இந்தப் போராட்டம் நடைபெற்றது. (ஐ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் வளி மாசடைவு அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 20

நாட்டின் சில பிரதேசங்களில் காற்று மாசடையும் நிலை நேற்று மீண்டும் அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகளவில் காற்று மாசடைந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் 112 புள்ளியாக காற்று மாசடைவிற்கான தரச்சுட்டி பதிவாகியுள்ளது. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 66 புள்ளியாகவும் மன்னார் பிரதேசத்தில் 52 புள்ளியாகவும் காற்று மாசு தரச்சுட்டி பதிவாகியுள்ளது.

அமெரிக்க வளி தரச்சுட்டிக்கு அமைய கடந்த சில தினங்களுக்கு முன்னர் சில மாவட்டங்களில் 100 புள்ளிகளை விட அதிகரித்த காற்று மாசு காணப்பட்டது. (ஐ)

## கல்வி TV CHANNEL-1

**20.12.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி TV CHANNEL - 2

**20.12.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# டெங்கு நோய் பரவலை தடுக்க வேலைத்திட்டம்



அம்பாறை, டிசெ. 20

கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம் றிபாஸ் பணிப்புரைக்கு அமைய சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். எஸ்.ஐ.எம் கபீரின் வழி காட்டலின் கீழ் சுகாதார மேற்பார்வைப் பரிசோதகர் ஐ.எல். றாஸிக் தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் கிராம சேவையாளர்கள், டெங்கு களத் தடுப்பு உத்தியோகத்தர்கள், சம்மாந்துறை லயன்ஸ் கழகம் இணைந்து சம்மாந்துறை பிரதேச எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வீட்டுக்கு வீடு பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் 320 வீடுகளில் மேற்கொள்ளப் பட்டதாகவும், நுளம்பு பரவலில் இனம் காணப்பட்ட 10 பேருக்கு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதாகவும், டெங்கு நுளம்பு பரவக் கூடிய 35 இடங்கள் அடையாளம் காணப்பட்டதுடன் சிவப்பு எச்சரிக்கை அட்டைகள் 10 ஒட்டப்பட்டதாகவும் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எஸ். ஐ.எம் கபீர் தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சம்மாந்துறை1,2,3, மட்டக்களப்பு தரவை 1,தமிழ் பிரிவு 1,2,3,4 கிராம சேவையாளர் பிரிவுகளில் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார மேற்பார்வைப் பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர்கள், கிராம சேவையாளர்கள், டெங்கு களத்தடுப்பு உத்தியோகத்தர்கள், சம்மாந்துறை லயன்ஸ் கழகம் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# கிழக்கு முழுவதும் பிள்ளையான் கட்சி தேர்தல்களில் தனித்துக் களமிறங்கும்!

## பொதுச் செயலாளர் பிரசாந்தன் அறிவிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 20

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி, மற்றும் மாகாணசபை தேர்தல்களில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி கிழக்கு மாகாணம் பூராக போட்டியிடுமென அக் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்துள்ளளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தலைவர் சி.சந்திரகாந்தனின் தூரநோக்குக்கு அமைய தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு அமைய அம்பாறை மற்றும் திருகோணமலையில் வாழும் தமிழர்களின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்ககாக 2018ஆம் ஆண்டு பொது அமைப்புக்களும் தேசிய கட்சிகளும் பேசியதற்கு அமைவாக கட்டுப்பணம் செலுத்தியிருந்தபோதிலும் நாம் அங்கு தேர்தலில் போட்டியிடவில்லை.

ஆனால் 2018 வருடம் வெற்றி பெற்றிருந்த தேசிய கட்சிகள் திருகோணமலையிலும் அம்பாறையிலும் கடந்த நான்கரை வருடங்களில் என்ன செய்துள்ளார்கள் என்ற ஏக்கங்கள் அங்குள்ள மக்களுக்கு இருக்கின்றன.

அதனை நிவர்த்தி செய்வதற்காக மட்டு, அம்பாறை, திருகோணமலை போன்ற மூன்று இடங்களிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் பாரிய வெற்றியை எமது கட்சி பெறும் என்பதை மக்கள் இன்று ஏற்றுக்கொண்டுள்ளனர்.

தேர்தல்கள் தொடர்பில் நாங்கள் தெளிவாக இருக்கின்றோம் மக்களின் ஜனநாயகம் பாதுகாக்கப்படவேண்டும் என்றால் தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும். மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படாத கரணத்தால் அரச அதிகரிகள் முதல் மக்கள் வரை மிக அசௌகரியப்பட்டுக் கொண்டு இருக்கின்றனர்.

நல்லாட்சி காலத்தில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இழுத்தடிப்புச் செய்துவிட்டு தற்போது முதலை கண்ணீர் விடுகின்றது.

கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் என்பதுபோல் மக்களை ஏமற்றி வருகின்றது. ஆகவே எதிர் வரும் தேர்தல்களில் கிழக்கு மாகாணம் பூராக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி போட்டியிடும் என தெரிவித்துக்கொள்கின்றேன்-என்றார். (அ)

# காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் பஸ்மீர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைவு



அம்பாறை, டிசெ. 20

அம்பாறை, காரைதீவு பிரதேச சபை சுயேச்சைக் குழு (தோடம்பழ சின்னம்)அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முன்னால் மாளிகைக்காடு பிரதேச அமைப்பாளரும், ஐக்கிய சமூக சேவை நலன்புரி ஒன்றியத்தின் தலைவரும், மாளிகைக்காடு மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க தலைவருமான ஏ. ஆர்.முஹம்மட் பஸ் மீர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் கடந்த சனிக்கிழமை இணைந்து கொண்டார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்ட நிலையில் கட்சி தலைவர் முன்னிலையில் உத்தியோகபூர்வமாக அவர் இணைந்து கொண்டார்.

இதன்போது கல்முனை மாநகர பிரதி முதல்வரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ரஹ்மத் மன்சூர்,காரைதீவு பிரதேச பிரதேச சபை உறுப்பினரும்,ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மாளிகைக்காடு அமைப்பாளர் எஸ். எம்.இஸ்மாயில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மாளிகைக்காடு கிழக்கு வட்டார அமைப்பாளர் எம். எச்.நாஸர்,முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினரும் கட்சியின் அமபாரை மாவட்ட குழுச் செயலாளர் ஏ.சி. சமால்டீன் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# காரைதீவில் நாவலரின் 200 ஆவது அகவை விழா

அம்பாறை, டிசெ. 20

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவ லரின் 200ஆவது அகவை நிறைவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களமும், காரைதீவு சுவாமி விபுலா நந்தர் ஞாபகார்த்த பணி மன்றமும் இணைந்து நடத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குரு பூசை விழா நேற்று முன் தினம் காரைதீவில் சுவாமி விபு லாநந்தர் ஞாபகார்த்த மணி மண்டபத்தில், காரை தீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அதி தியாக சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார். பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்துகொண்டார். (அ)



# கல்முனை தனியார் வைத்தியசாலையொன்றின் இனவாத போக்கை வன்மையாக கண்டிக்கிறோம்!

## கல்முனை தமிழ் இளைஞர் சேனை அறிக்கை

அம்பாறை, டிசெ. 20

கல்முனை நகரில் இயங்கி வரும் தனியார் வைத்தியசாலையொன்றின் இனவாதப் போக்கை வன்மையாக கண்டிக்கிறோம் என்று “கல்முனை தமிழ் இளைஞர் சேனை” அமைப்பு தெரிவித்துள்ளது.

இது வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்-

பல தசாப்தங்களாக இருந்து வந்த ஊரான கல்முனைக்குடி எனும் ஊர் கடந்த 5,6 வருடங்களுக்குள் தற்போது மறைக்கப்பட்டு, கல்முனை ஆக மாற்றப்பட்டு வருகிறது. அதன் செயல்பாடாக கல்முனை ஊரின் பெயர்ப் பலகை கல்முனைக்குடி சாய்ந்தமருது எல்லையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கல்முனையில் தமிழ் மக்களின் செறிவை குறைத்து காண்பிக்கவும், கல்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாகத்தை குலைத்து, பொதுமக்களுக்கான சேவையை வழங்க தடை ஏற்படுத்தும் நோக்கோடும் ஒரு சில இனவாதிகள் செயல்பட்டு வருகின்றனர். அதன் ஒரு செயல்பாடாக கல்முனை நகரில் இயங்கும் தனியார் வைத்தியசாலை ஒன்றில் பிறக்கும் குழந்தைகளுக்கான பிறப்புப் பதிவு வேறு பிறப்பு இறப்புப் பதிவாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

குறித்த தனியார் வைத்தியசாலை கல்முனை நகரில் இயங்குவதால் அங்கு இடம் பெறும் மகப்பேறு பதிவுகள் கல்முனை நகர் பிறப்பு இறப்பு பதிவாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்டு, அதன் பிரதிகள் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

இதற்கு மாறாக குறித்த தனியார் வைத்தியசாலை நிர்வாகம் அங்கு மகப்பேற்றுக்காக அனுமதிக்கப்படும் நபர்களிடம் பிறப்புப் பதிவை கல்முனைக்குடி பதிவாளர் பிரிவில் பதிவு செய்யும்படி கட்டாயப்படுத்தி, பலவந்தப்படுத்தி பிறப்புப் பதிவை பதிவு செய்ய நிர்ப்பந்தம் செய்கின்றனர்.

இது தொடர்பாக சம்மந்தப்பட்ட அரச அலுவலகங்களுக்கு கடிதங்கள் அனுப்பியதை தொடர்ந்து அங்கு இருந்து சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கும், சம்பந்தமான வைத்தியசாலைக்கும், குறித்த பிறப்பு இறப்பு பதிவாளருக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டு இருந்தது. இருந்தும் அது தொடர்பில் அவர்கள் கருத்தில் கொள்ளாது தொடர்ந்தும் முட்டாள் தனமான முறையில் செயல் பட்டு வருகின்றனர்.

தற்போது பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் நடைமுறைப் படுத்தி வரும் ஈ சனத்தொகை ( E Population) திட்டத்தின் கீழ் இச் செயல்பாட்டினால் குழப்பம் கொள்ள சந்தர்ப்பம் உள்ளதுடன், இந்த பிறப்பு இறப்பு பதிவை கணனிமய படுத்தலின் போதும் பல பிழைகள் ஏற்படவும் வாய்ப்புண்டு. இதனால் குறித்த குழந்தையின் எதிர்காலத்தில் பல சிக்கல்களை எதிர்கொள்ளவும் சந்தர்ப்பம் உள்ளது.

கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள பதிவாளர் பிரிவில் கல்முனை நகர் என்பது தரவை பிள்ளையார் ஆலய வீதியின் வடக்கு புறம் தொடக்கம் தாள வெட்டுவான் வீதியின் தெற்கு புறம் வரையான பகுதியே ஆகும்.

இந்த பகுதியில் உள்ள வீட்டில் அல்லது தனியார் வைத்தியசாலைகளில் அரச வைத்தியசாலையில் இடம்பெறும் பிறப்பு மற்றும் இறப்பு தொடர்பான பதிவுகள் கல்முனை நகர் பதிவாளர் ஊடாகவே செய்யப்படும்.

ஆகவே தவறான எண்ணத்தோடு செய்யப்பட்டு, குறித்த தனியார் வைத்தியசாலை நிர்வாகமும் மற்றும் அரச அதிகாரிகளும் சிந்தித்து செயலாற்ற வேண்டும் என கேட்டு கொள்வதுடன். இது தொடர்பில் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளின் கவனத்துக்கும் கொண்டு செல்கிறோம்-என்றுள்ளது. (அ)

# ஆப்கான் சுரங்கப்பாதையில் ஏற்பட்ட தீயால் 19 பேர் பலி!

## குறைந்தது 32 பேர் காயம்



காபூல், டிசெ. 20

ஆப்கானிஸ்தானில் சுரங்கப்பாதையில் ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது 19 பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் குறைந்தது 32 பேர் காயமடைந்துள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் காபூலை வடக்கு மாகாணங்களுடன் இணைக்கும் சலாங் சுரங்கப்பாதையில் எண்ணெய் தாங்கி ஒன்று கவிழ்ந்து தீப்பிடித்தது. மறுநாள் காலை தீயை அணைப்பதற்குள் மற்ற வாகனங்களுக்கும் தீ பரவியது. சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட படங்கள் இந்த சம்பவத்திற்குப் பிறகு பல வாகனங்கள் முற்றிலும் எரிந்ததைக் காட்டுகின்றன.

சில உடல்கள் கடுமையாக எரிந்து போயுள்ளதாகவும் இறந்தவர்களில் யார் ஆண், யார் பெண் என்பதை அடையாளம் காண்பது மிகவும் கடினமாக இருந்தது எனவும் பர்வானில் உள்ள மூத்த சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால், உயிரிழப்பு எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என்று கருதப்படுகிறது. மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அந்த பாதை போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளதாக பொதுப்பணித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சலாங் சுரங்கப்பாதை 2.6 கிமீ (1.6 மைல்) நீளமானது மற்றும் சுமார் 3,400 மீ (11,154 அடி) உயரத்தில் அமைந்துள்ளது.

1960ஆம் ஆண்டுகளில் சோவியத் ஒன்றியத்தால் முடிக்கப்பட்ட பொறியியல் தலைசிறந்த படைப்பாகப் போற்றப்பட்டது. இந்து குஷ் மலைகள் வழியாக செல்லும் முக்கிய பாதை அடிக்கடி விபத்துக்கள் மற்றும் பனிச்சரிவுகள் காரணமாக பல நாட்களுக்கு மூடப்பட்டது.

1982இல் சுரங்கப்பாதையில் ஏற்பட்ட தீயில் குறைந்தது 400 பேர் உயிரிழந்தனர். இருப்பினும் சில மதிப்பீடுகளின்படி ஆயிரக்கணக்கானோர் இறந்தனர். (அ)

## இராணுவ உளவு செயற்கைக்கோள்:

# இறுதிச் சோதனையை நடத்திய வடகொரியா!



பியொங்யாங், டிசெ. 20

வட கொரியா முக்கியமான, இறுதி கட்ட சோதனையை நடத்தியதாக, கொரிய மத்திய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வட கொரியாவின் தேசிய விண்வெளி மேம்பாட்டு நிர்வாகம் வட பியோங்கன் மாகாணத்தில் உள்ள சோல்சானில் உள்ள சோஹே செயற்கைக்கோள் ஏவுதளத்தில் இருந்து நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இந்த சோதனையை நடத்தியது.

பல கேமராக்கள், இமேஜ் டிரான்ஸ்மீற்றர்கள் மற்றும் ரிசீவர்கள், ஒரு கட்டுப்பாட்டு சாதனம் மற்றும் சேமிப்பக பேட்டரி உட்பட, சோதனை-துண்டு செயற்கைக்கோள் என்று விபரிக்கப்படும் ரொக்கெட், 500 கிமீ (311 மைல்) உயரத்திற்கு மாடப்பட்ட கோணத்தில் ஏவப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனையானது செயற்கைக்கோள் இமேஜிங் திறன்கள், தரவு பரிமாற்றம் மற்றும் தரைக் கட்டுப்பாட்டு அமைப்பு ஆகியவற்றை மதிப்பாய்வு செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளதாக கொரிய மத்திய செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

'விண்வெளி சூழலில் கெமரா இயக்க தொழில்நுட்பம், தகவல் தொடர்பு சாதனங்களின் தரவு செயலாக்கம் மற்றும் பரிமாற்ற திறன், தரைக் கட்டுப்பாட்டு அமைப்பின் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு துல்லியம் போன்ற முக்கியமான தொழில்நுட்ப குறிகாட்டிகளை நாங்கள் உறுதிப்படுத்தியுள்ளோம்' என்று பெயரிடப்படாத வட கொரிய விண்வெளி செய்தித் தொடர்பாளர் கூறினார்.

எதிர்வரும் 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் முதல் இராணுவ உளவு செயற்கைக்கோளுக்கான தயாரிப்புகளை முடிக்க வட கொரியா திட்டமிட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# போராட்டக்காரர்களை ஆதரித்த முன்னணி ஈரானிய நடிகை கைது!

தெஹ்ரான், டிசெ. 20

ஈரானில் நடக்கும் போராட்டங்கள் குறித்து பொய்யான தகவல்களைப் பரப்பிய குற்றச்சாட்டின் பேரில் அந்த நாட்டின் மிகவும் பிரபலமான நடிகைகளில் ஒருவரை ஈரானிய அதிகாரிகள் கைது செய்ததாக அரச ஊடகங்கள் தெரிவித்தன.

ஒஸ்கார் விருது பெற்ற தி சேல்ஸ்மேன் திரைப்படத்தின் நட்சத்திரமான தாரனே அலிதூஸ்டி, இன்ஸ்டாகிராமில் ஒரு பதிவை வெளியிட்டு ஒரு வாரத்திற்குப் பிறகு சிறையில் அடைக்கப்பட்டார் என்று இஸ்லாமிய குடியரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. தவறான மற்றும் திரிபுபடுத்தப்பட்ட உள்ளடக்கத்தை வெளியிட்டதற்காக மற்றும் குழப்பத் தைத் தூண்டியதற்காக அவர் கைது செய்யப்பட்டார் என தெரிவித்தது.

மேலும் பல ஈரானிய பிரபலங்கள் ஆத்திர மூட்டும் உள்ளடக்கத்தை வெளியிட்டதற்காக நீதித்துறை அமைப்பால் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் இஸ்லாமிய குடியரசு செய்தி நிறுவனம் கூறியது.

அரச ஊடகத்தின் அதிகாரபூர்வ டெலிகிராம் சனலில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, அலிடூஸ்டி கைது செய்யப்பட்டார், ஏனெனில் அவர் 'அவரது பதிவுகளுக்கு ஏற்ப எந்த ஆவணங்களையும்' வழங்கவில்லை.

தெஹ்ரானில் ஒரு தெருவைத் தடுத்ததற்காகவும், நாட்டின் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒருவரைக் கத்தியால் தாக்கியதற்காகவும் ஈரானிய நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்ட பின்னர் ஷேகாரி டிசெம்பர் 9 அன்று தூக்கிலிடப்பட்டார்.

38 வயதான நடிகை இதனை விமர்சித்து இன்ஸ்டகிராமில் பதிவிட்டிருந்தார். இது மனித குலத்திற்கே அவமானம் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த வாரம், போராட்டங்கள் தொடர்பாக ஈரான் இரண்டாவது கைதியான மஜித்ரேசா ரஹ்னாவார்டை தூக்கிலிட்டது. மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக ரஹ்னாவார்டின் உடல் பகிரங்கமாக தொங்க விடப்பட்டிருந்தது. ஈரானிய அதிகாரிகள் ரஹ்னவார்ட் அதன் துணை ராணுவப் படையைச் சேர்ந்த இருவரை கத்தியால் குத்தியதாகக் குற்றம் சாட்டினர்.

இரண்டு பேரும் குற்றம் சாட்டப்பட்டு ஒரு மாதத்திற்குள் தூக்கிலிடப்பட்டனர், ஆர்ப்பாட்டங்கள் தொடர்பான குற்றங்களுக்கு ஈரான் இப்போது மரண தண்டனையை நிறைவேற்ற வேகம் காட்டுகிறது. மூடிய கதவு விசாரணையில் குறைந்தது ஒரு டசின் பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக ஆர்வலர்கள் கூறியுள்ளனர். (அ)



# செக் குடியரசில் தஞ்சமடைந்துள்ள உக்ரைன் குழந்தைகளின் கிறிஸ்மஸ்

பிராக், டிசெ. 20

செக் குடியரசில் தஞ்சமடைந்துள்ள உக்ரைன் அகதிகள் கிறிஸ் மஸ் விழாவை முன்னிட்டு நடைபெறும் கரோல் பாடல் நிகழ்ச்சி களில் பங்கேற்றனர். பிரேக் நகரில் பனி படர்ந்த நகரங்களில் கிறிஸ்மஸ் விழா களை கட்டியுள்ளது.

அங்குள்ள கிறிஸ்மஸ் மரங்கள் அலங்கரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. உக்ரைன் போரில் உடைமைகளையும், பெற்றோரையும் இழந்து செக் குடியரசில் தஞ்சம் அடைந்துள்ள குழந்தைகள், கிறிஸ்மஸ் விழாவை கொண்டாட அங்குள்ள தன்னார்வலர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர். (அ)

# குளிர்காலத்தின் முதல் கோவிட் அலையை எதிர்கொள்ளும் சீனா!

பீஜிங், டிசெ. 20

இந்த குளிர்காலத்தில் கோவிட் நோய்த்தொற்றுகளின் எதிர்பார்க்கப்படும் மூன்று அலைகளில் முதல் அலையை சீனா அனுபவித்து வருவதாக சீனாவின் உயர்மட்ட சுகாதார அதிகாரி ஒருவர், தெரிவித்துள்ளார். இந்த மாத தொடக்கத்தில் அதன் மிகக் கடுமையான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதிலிருந்து நாடு தொற்று களின் அதிகரிப்பைக் காண்கிறது.

சமீபத்திய அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள் ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையிலான புதிய தினசரி தொற்றுகளைக் காட்டுகின்றன.

இருப்பினும், கோவிட் பரிசோதனையில் சமீபத்திய குறைப்பு காரணமாக இந்த எண்கள் குறைத்து மதிப்பிடப்பட்டதாக கவலைகள் உள்ளன.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை 2,097 புதிய தினசரி கொவிட் தொற்றுகளை மட்டுமே அரசாங்கம் பதிவு செய்துள்ளது.

தொற்றுநோய்களின் தற்போதைய அதிகரிப்பு ஜனவரி நடுப்பகுதி வரை தொடரும் என்று அவர் நம்புவதாகவும், இரண்டாவது அலை ஜனவரி 21ஆம் திகதி தொடங்கும் ஒரு வார கால சந்திர புத்தாண்டு கொண்டாட்டங்களைச் சுற்றி ஜனவரி மாதத்தில் வெகுஜன பயணத்தால் தூண்டப்படும் என்றும் தொற்றுநோயியல் நிபுணர் வு ஜுன்யு கூறினார். குடும்பத்துடன் விடுமுறையைக் கழிக்க லட்சக்கணக்கான மக்கள் வழக்கமாக இந்த நேரத்தில் பயணம் செய்கிறார்கள்.

விடுமுறைக்குப் பிறகு மக்கள் வேலைக்குத் திரும்புவதால், தொற்றுகளின் மூன்றாவது எழுச்சி பெப்ரவரி பிற்பகுதியிலிருந்து மார்ச் நடுப்பகுதி வரை இயங்கும் என்று டாக்டர் வு கூறினார்.

சனிக்கிழமையன்று நடந்த ஒரு மாநாட்டில், தற்போதைய தடுப்பூசி அளவுகள் எழுச்சிகளுக்கு எதிராக ஒரு குறிப்பிட்ட அளவிலான பாதுகாப்பை வழங்குவதாகவும், இதன் விளைவாக கடுமையான தொற்றுகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார்.

ஒட்டுமொத்தமாக, சீனாவின் மக்கள் தொகையில் 90 சதவீதத்துக்கும் அதிகமானோர் முழுமையாக தடுப்பூசி போடப்பட்டுள்ளனர். இருப்பினும், 80 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களில் பாதிக்கும் குறைவானவர்கள் மூன்று டோஸ் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர். வயதானவர்கள் கடுமையான கொவிட் அறிகுறிகளால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

சீனா தனது சொந்த தடுப்பூசிகளை உருவாக்கி தயாரித்துள்ளது, இது உலகின் பிற பகுதிகளில் பயன்படுத்தப்படும் எம்ஆர்என்ஏ தடுப்பூசிகளை விட தீவிரமான கொவிட் நோய் மற்றும் இறப்புக்கு எதிராக மக்களைப் பாதுகாப்பதில் குறைவான செயல்திறன் கொண்டதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த வார தொடக்கத்தில் அமெரிக்காவை தளமாகக் கொண்ட ஒரு புகழ்பெற்ற ஆராய்ச்சி நிறுவனம், 2023ஆம் ஆண்டில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கொவிட் நோயால் இறப்பதைக் காண முடியும் என்று சீனா நம்புவதாக அறிவித்ததை அடுத்து டாக்டர் வூவின் கருத்துக்கள் வந்துள்ளன. (அ)

# சரியான பாதை அமைக்காமல் 2023இல் அடி வைக்கிறது அரசு!

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 20

எந்த திசையில் செல்லப் போகின்றோம் என்ற அறியாமையுடன் இலங்கை அரசாங்கம் 2023 இல் அடியெடுத்து வைக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கடந்த 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் தடவையாக மத்திய வங்கி 2023 ஆம் ஆண்டுக்கான வரைபடத்தை வகுக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி டிசெம்பரில் வரும், ஜனவரியில் வரும் அல்லது மே, ஜூன் என அரசாங்கத்தில் உள்ளவர்கள் சரியான கணிப்பை வெளியிடவில்லை.



எவ்வாறாயினும் 3 பில்லியன் டொலர் உதவியை நாடு தவறவிட்டால், எப்படி உயிர் வாழ்வது மற்றும் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது என்ற திட்டம் அரசாங்கத்திடம் இருக்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசாங்கத்திடம் பொருளாதாரத்திற்கான ஒருங்கிணைந்த திட்டம் இல்லை என்பதே இந்த அனைத்துப் பிரச்னைகளுக்கும் காரணமாகும்-என்றார். (அ)

# வேகமாக பரவும் இன்புளுவன்ஸா

## அவதானத்துடன் செயற்பட கோரிக்கை

கொழும்பு, டிசெ. 20

இன்புளுவன்ஸா வைரஸ் வேகமாக பரவுவதால், அவதானமாக இருக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிறு குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்கே அதிக பாதிப்பு ஏற்படுவதாக இலங்கை நுண்ணுயிரியல் நிபுணர்கள் நிறுவகத்தின் தலைவர் வைத்தியர் ரோஹினி வடநம்பி தெரிவித்தார்.

இந்த இன்புளுவன்ஸா வைரஸ் பரவுவதால், கடுமையான தொண்டை புண் மற்றும் காய்ச்சல் ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே எப்போதும் முகமூடிகளை அணிவது மற்றும் கைகளை சுத்தமாக வைத்திருப்பது முக்கியம் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் உபகரணங்களுக்கு வரி கிடையாது!

கொழும்பு, டிசெ. 20

அண்மைய வரி திருத்தங்கள் காரணமாக மாற்றுத்திற னாளிகள் பயன்படுத்தும் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் விலைகள் 400 வீதத்தால் அதிகரிக்கப்படும் என்ற குற்றச்சாட்டை நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மறுத்துள்ளார்.

விசேட தேவையுடையவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களுக்கு அரசாங்கம் வற் அல்லது சுங்க வரியை அறவிடுவதில்லை என்பதால், இவ்வாறான கூற்றுக்களில் எந்த அடிப்படையும் இல்லை என இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார்.

எனவே புதிய வரிக் கொள்கையினால் விசேட தேவையுடையவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களின் விலைகள் அதிகரிக்கப்படாது என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (அ)

# யாழ். பாடசாலை மாணவர்களுக்கு விற்க தயாராக இருந்த மாவா மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்களுக்கு விற்பதற்கு தயாராக இருந்த கஞ்சா கலந்த மாவா போதைப் பொருள் யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து பாடசாலை மாணவர்களுக்கு விற்பதற்கென தயாராக இருந்த 3 கிலோ 500 கிராம் எடை கொண்ட கஞ்சா கலந்த மாவா கைப்பற்றப்பட்டது.



இதன்போது கஞ்சா கலந்த மாவாவை உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரிடம் மேற்கொள் ளப்பட்ட விசாரணைகளின்போது தான் தொடர்ச்சியாக பாடசாலை மாணவர்களுக்கு இந்த மாவா விற்பனை செய்வதாகவும், தனக்கு இதனால் அதிக லாபம் கிடைப்பதாகவும், நீண்ட காலமாக இந்த தொழிலை மறைமுகமாக செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை யாழ். நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் விசேட கிறிஸ்மஸ் கரோல் நிகழ்ச்சி



கொழும்பு, டிசெ. 20

ஜனாதிபதி அலுவலக வளாகத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் சுற்றுலா அபிவிருத்திச் சபை, முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து ஏற்பாடு செய்திருந்த விசேட கிறிஸ்மஸ் கரோல் நிகழ்ச்சி உள்ளிட்ட கொண்டாட்டங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

காலி முகத்திடலை அண்மித்த பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்ச்சியைக் காண பெருந்திரளான மக்கள் இன, மத பேதமின்றி ஜனாதிபதி அலுவலக வளாகத்தைச் சுற்றி திரண்டிருந்தனர்.

நிகழ்ச்சியைக் காண்பதற்காக அங்கே குழுமியிருந்த மக்களிடம் ஜனாதிபதி சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டிருந்ததுடன், ஜனாதிபதிக்கும் அமோக வரவேற்பளித்தனர்.

அங்கு வருகை தந்திருந்த சிறுவர்களிடம் விவரங்களை கேட்டறிந்த ஜனாதிபதி, அவர்களுடன் புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டார்.

முப்படை மற்றும் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த பாடகர் குழுவினரின் பங்குபற்றுதலுடன் ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் கிறிஸ்துமஸ் கரோல் நிகழ்ச்சியும் ஆரம்பமானது.

டி.எஸ் சேனாநாயக்கவின் சிலைக்கு முன்பாக உள்ள படிக்கட்டுகளில் அமர்ந்திருந்த ஜனாதிபதி, அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருடன் இணைந்து கிறிஸ்மஸ் கரோல் இசை நிகழ்ச்சியை பார்வையிட்டார்.



இந்த கிறிஸ்மஸ் கரோல் நிகழ்ச்சி மற்றும் கொண்டாட்டங்கள் டிசெம்பர் 23 ஆம் திகதி வரை இரவு 7.00 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறும்.

இதேவேளை, ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸ் இசைக்குழுக்களின் பங்கேற்புடன் பாண்ட் வாத்திய இசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளதுடன், ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான கிறிஸ்மஸ் மரத்தை பொதுமக்கள் கண்டுகளிக்கவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் .நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# 2 இலங்கை பெண்கள் சென்னையில் கைது!

சென்னை, டிசெ. 20

போலி இந்திய கடவுச் சீட்டை பயன்படுத்தி இலங் கைக்கு வருகை தர முயன்றார் கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரு பெண்கள் சென்னை சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கங்கா (வயது-46) மற்றும் சொர்ணகலா (வயது-22) ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என தெரி விக்கப்படுகின்றது.

இரண்டு பெண்களும் சென்னை முகவரியுடன் கூடிய இந்திய கடவுச்சீட்டையும் இலங் கைக்கான சுற்றுலா விஸாவை யும் தயாரித்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இருப்பினும், அதிகாரிகள் அவர்களின் தரவுத்தளத்தை சரி பார்த்தபோது, அவர்களின் கடவுச்சீட்டு போலியானது என்பதைக் கண்டறிந்து பயணி களை விமானத்தில் ஏற விடா மல் தடுத்துள்ளனர்.

விசாரணையில், குறித்த பெண்கள் இலங்கைப் பிரஜை கள் என்பதும், சுற்றுலா விஸா வில் சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னைக்கு வந்து தங்கியிருப் பதும் தெரிய வந்துள்ளது.

இவர்கள் போலி கடவுச் சீட்டு பெற முகவர் நிலையத் துக்கு பணம் கொடுத்துள்ள னர்.

மேலதிக விசாரணைக்காக சென்னை பொலிஸ் மத்திய குற்றப்பிரிவின் போலி கடவுச் சீட்டு பிரிவில் குறித்த பெண்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# அரசியல்வாதிகள் 60 வயதில் ஓய்வு பெற்றுவிடவேண்டும்!

## வலியுறுத்துகிறார் சிறிவிமல தேரர்

கொழும்பு, டிசெ.20

**அரசியல்வாதிகள் 60 வயதில் ஓய்வு பெற்று இளைய தலைமுறையினருக்கு வாய்ப்புகளை வழங்கவேண்டும் என சிறிவிமல தேரர் தெரிவித்துள்ளார்.**

அரச பணியில் உள்ள மருத் துவர்கள், பொறியாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு அமுலா கும் சட்டம் அரசியல்வாதி களுக்கும் பொருந்தும் என்றும் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேரா சிரியர் ஜி.எல்.பீரிஸை நேற்று முன் தினம் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.



பிரதமரின் சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரச ஊழியர்களும் அறுபது வயதில் ஓய்வுபெறவேண்டும் என சிறிவிமல தேரர் குறிப்பிட்டார்.

அறுபது வயதிற்குப் பிறகு மக்கள் உடல், மன மற்றும் உடல்நலப் பிரச்னைகளையும், மற்ற பலவீனங்களையும் அனு பவிக்கிறார்கள் என்று அவர் கூறினார். (அ)

# காற்றின் தரத்தில் மீண்டும் மாற்றம்

கொழும்பு, டிசெ. 20



கொழும்பு மற்றும் கேகாலை மாவட்டங்களில் காற்றின் தரம் மீண்டும் குறைந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்று திங் கட்கிழமை கொழும்பு மற்றும் கம்பஹா காற்றின் தரக் குறியீடு 150 இற்கு மேல் சென்றதா கவும் இந்தப் பகுதிகளில் வசிப்பவர்கள் உடல்நல பாதிப்பு களைச் சந்திக்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் யாழ்ப்பாணம், புத்தளம், பதுளை மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் வார இறுதியில் குறைந்த காற்றின் தரம் மேம்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ)

# ஐக்கிய தேசிய கட்சி - பெரமுன கூட்டணி புதிய விடயம் அல்ல!

## கூறுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, டிசெ. 20

ஐக்கிய தேசிய கட்சி, பொது ஜன பெரமுன கூட்டணி என்பது புதிய விடயமல்ல என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இவ்விரு கட்சிகளுக்கும் இடையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் செய்து கொள்ளப் பட்ட ஒப்பந்தத்தின் அடிப்ப டையிலேயே அவர்கள் செயற் பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்கு தல்களை அரசியல் இலாபத் திற்காக மட்டும் பயன்படுத்திக்



கொண்ட அரசாங்கம் இன்று அதனை மறந்து உறங்கிக் கொண்டிருக்கிறது.

இதேவேளை, நாட்டின் மாணவர் சமுதாயத்தை பயங் கரவாதிகளாகவும் போதைப் பொருள் பாவனையாளர் களாகவும் காண்பிக்க அர சாங்கம் முயற்சிக்கிறது.

சட்டம் மற்றும் ஒழுங் கில் காணப்படுகின்ற பாரதூரமான பலவீனமே பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை தீவிரமடையக் காரணம்.

எவ்வாறாயினும் தமது அரசாங்கத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பேணப் பட்டு பொறுப்பு கூற வேண்டி யவர்களுக்கு நிச்சயம் தண்டனை வழங்கப்படும்-என்றார். (அ)

# மன்னாரில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய மாணவர்களுக்கு உதவி



மன்னார், டிசெ. 20

மன்னார் மாவட்டத்தில் இருந்து இவ்வரு டம் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ள வறிய குடும்பங்களைச் சேர்ந்த முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 20 மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

நேற்று திங்கட்கிழமை பாராளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கலநாதனின் கோரிக் கைக்கு அமைவாக நோர்வே நாட்டில் உள்ள நடேசு அறக்கட்டளை ஊடாக 10 மாணவர் களுக்கு ஜேர்மனியைச் சேர்ந்த நாகரெட்ணம் ஜெயதீபன் மற்றும் புலேந்திரன் ஆகியோர் நிதி உதவி வழங்கினர்.

இதன்போது மாணவர் ஒவ்வொருவருக்கு 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட் டது. அத்துடன் மாணவர்க ளுக்கு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாய் 2 வருடங்களுக்கு வழங்க வும் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன்,மன்னார் நகர முதல் வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் மற்றும் மன்னார் பிரதேச சபையின் உறுப்பினர் லுஸ்ரின் மோகன்ராஜ் ஆகி யோர் இணைந்து உதவிகளை வழங்கி வைத் தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# "புதிய கூட்டணிக்காக 8 கட்சிகளுடன் பேச்சு"

கொழும்பு, டிசெ. 20

புதிய கூட்டணியுடன் தேர் தலில் போட்டியிட தீர்மா னித்து அதற்காக 8 கட்சிகளு டன் ஏற்கனவே பேச்சுவார்த் தைகள் முன்னெடுக்கப்பட்டுள் ளதாக ஆளும்கட்சி தெரிவித் துள்ளது.

அதனை அடுத்து விரைவில் சின்னம் குறித்து தீர்மானித்து அறிவிக்கப்படும் என நகர அபி விருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலின் மூலம் நாட்டின் பொருளாதார பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியாது என குறிப்பிட்ட அவர், இதில் அரசியல் தேவை காணப்படுவதாக தெரிவித்தார்.

எவ்வாறாயினும் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட தேர்தல் நடத்தப்பட வேண் டும் என்றும் எந்த நேரத்திலும் தேர்தலை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் நாட்டில் ஏற்பட் டுள்ள நெருக்கடியில் இருந்து எப்படி மீள்வது என்று சிந்தித்து அனைவரும் ஒன்றாக செயற்பட வேண்டும் என்றும் பிரசன்ன ரணதுங்க கேட்டுக் கொண்டார். (அ)

# தினேஸ் சாப்டர் படுகொலை; சமுதித்தவிடம் வாக்குமூலம்

கொழும்பு, டிசெ. 20

வர்த்தகர் தினேஸ் சாப்டர் கொலை தொடர்பில் ஊட கவியலாளர் சமுதித்த சமரவிக்கிரமவிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

தினேஸ் சாப்டர் கொலை செய்யப்பட்ட தினத்தன்று ஊடகவியலாளர் கீர்த்தி வர்ணகுலசூரியவுடன் சமுதித்த மேற்கொண்ட யூ ரியூப் நேர்காணல் தொடர்பிலேயே அவரிடம் சி.ஐ.டியினர் வாக்குமூலத்தை பதிவு செய்துள் ளனர்.

ஊடகவியலாளரிடம் சி.ஐ.டியினர் இரண்டரை மணி நேரம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# வெளிநாடு செல்லும் இலங்கையரின் எண்ணிக்கை பெருமளவு அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 20

இந்த ஆண்டு 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட நபர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெறுவதற்காக அதி காரபூர்வ வழிகள் மூலம் நாட்டை விட்டு வெளியேறி யுள்ளனர்.

இது வரலாற்றில் முதல் தடவை என தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஒரு வருடத்திற்குள் 300,000 க்கும் மேற்பட்ட நபர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற பதிவு செய்து வசதி செய்துள்ளது. நாடு தற்போது எதிர்நோக்கும் நெருக்கடியைத் தீர்க்க புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தங்கள் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவ தற்கு பங்களிப்பார்கள் எனவும் அமைச்சர் கூறினார்.(அ)

## ரூ.500...

கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரி வித்துள்ளது. பாடசாலை மாணவர்க ளுக்கான சீருடை துணிகளில் 70 சதவீத மான வெட்டிய துணிகளை வழங்க சீன அர சாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள நிலை யில், மிகுதி 30 சதவீத துணிகளை பெற் றுக்கொள்வதற்கான விலைமனு கோரப் பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை ஆரம்பிப்பதற்கு முன்னர் பாடசாலை மாணவர்களுக்கு சீருடை விநியோகிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோட்டாபய...

குழுவின் ஒப்புதலின் பேரில் இந்த நிய மனம் செய்யப்பட்டுள்ளது.

சி.ஏ. சந்திரபிரேமா கோட்டாவின் போர் என்ற நூலை எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 104...

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டே அங்கு அடைக் கப்பட்டுள்ளனர்.

மியன்மாரை சேர்ந்த சிறுபான்மை யினரான இந்த ரொஹிங்கிய முஸ்லிம் அகதிகள் பங்களாதேஷில் அடைக்கலம் புகுந்திருந்தனர். அங்கிருந்து இந்தோனே சியாவுக்கு அவர்கள் படகு மூலம் சென்ற னர். ஆனால், திசை மாறிப் பயணித்த அவர்களின் படகு பழுதடைந்து தத்த ளித்த நிலையில், கடந்த 17ஆம் திகதி வடமராட்சி கிழக்கு பகுதியில் வைத்து கடற்படையினரால் அவர்கள் மீட்கப்பட் டனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ-03)

## ஓ.எம்.பி...

உறவினர்கள் பெரும் எதிர்ப்பை தெரி வித்தனர். இதைத் தொடர்ந்து பெரு மளவு பொலிஸார் செயலகத்துக்கு அழைக்கப்பட்டு காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்களை வெளி யேற்றப்பட்டனர். இதனால், அங்கு பெரும் பதற்றமும் - குழப்பமும் - வாக்குவாதமும் ஏற்பட்டன.

காணாமல் போனோருக்கான அலுவலகம் முல்லைத்தீவு மாவட் டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை நேற்று ஆரம்பித்தது. இன்றும் நடைபெறவுள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த விசாரணை அமர்வில் 244 பேருக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது.

நேற்று காலை விசாரணைக்காக மாவட்ட செயலகத்துக்கு வந்த அதிகாரி களை உள்ளே நுழைய விடாது காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தடுத்து நிறுத்தி போராட்டத்தில் ஈடு பட்டனர். எதிர்ப்புப் போராட்டம் காரணமாக அதிகாரிகள் திரும்பிச் செல் வது போல் காட்டிக்கொண்டாலும், அவர்கள் போராட்டக்காரர்கள் இல் லாத இன்னொரு வழி ஊடாக மாவட்ட செயலகத்துக்குள் நுழைந்தனர்.

இதையடுத்து, போராட்டத்தில் ஈடு பட்டவர்கள் செயலகத்துக்குள் நுழைந்து தமது எதிர்ப்பைப் பதிவு செய்தனர். இதன்போது, காணாமல் போனோருக் கான அலுவலகத்தின் அதிகாரிகள் போராட்டக்காரர்களுடன் கலந்துரை யாடினர்.

பின்னர், போராட்டக்காரர்களிடம் தாம் இன்று விசாரணையை நடத்த வில்லை என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றனர். எனினும், விசாரணை நடக்கும் மண்டபத்தில் அதிகாரிகள் விசாரணைகளை நடத்தினர்.

இதை அறிந்த போராட்டக்காரர்கள் விசாரணை நடந்த மண்டபத்துக்குள் நுழைந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதையடுத்து மண்டபத் துக்குள் பெருமளவு பொலிஸார் வர வழைக்கப்பட்டு போராட்டக்காரர்கள் அங்கிருந்து அகற்றப்பட்டனர். இதன் போது, அங்கு வாக்குவாதமும் - பதற்ற நிலையும் உருவாகின. (ஐ)

## கே.கே.எஸ்...

தெரிவித்துள்ளது. இந்த பயணிகள் கப் பல் சேவையானது சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதோடு, இரு நாடுகளுக் கும் இடையிலான கலாசார உறவுகளை வலுப்படுத்தவும் வாய்ப்பாக அமையும்.

தென்னிந்தியாவில் இருந்து திரு கோணமலை மற்றும் கொழும்பு வரை யும் இந்த கப்பல் சேவைகள் பின்னர் விஸ்தரிக்கப்படும். அதற்கமைய துறை முகங்களில் சுங்கம், குடிவரவு மற்றும் குடியகல்வு மற்றும் ஏனைய வசதிகள் தொடர்பான உட்கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்யப்படும். இந்த சேவை யின் கீழ் கப்பல்கள் 300 முதல் 400 பயணி களை ஏற்றிச் செல்லக் கூடியவையாக அமையும். அத்துடன், பயணத்துக்கு மூன்றரை மணித்தியாலங் கள் பிடிக்கும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

இதேசமயம், இந்தியா - இலங்கை இடையே வத்தைகளே சேவையில் ஈடு படும் என்று அண்மையில் தகவல்கள் பர விய நிலையில், அமைச்சர் பயணிகள் கப் பல் சேவை நடைபெறும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

## நான்கில்...

தொடர்ந்து அதிகரித்து வருகிறது”,

ஜூன் 2022 முதல், ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு அதன் அவசரநிலை மற்றும் பின்னடைவு தலையீடுகளை அளவிட்டு, 62 ஆயிரத்து 640 குடும்பங்களுக்கு (2 இலட்சத்து 44 ஆயிரத்து 300 பேர்) சென்றடைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு, இலங்கை முன்னெப்போதும் இல்லாத பொருளா தார நெருக்கடியை சந்தித்து வருவதாக வும், அரசியல் மற்றும் சமூக கொந்தளிப் பால் நிலைமை மோசமடைவதாகவும் தெரிவித்துள்ளது.

இலங்கையின் சனத்தொகையில் கிட்டத்தட்ட 40 வீதமானவர்கள் விவ சாயத்தை முதன்மை வருமான ஆதார மாக நம்பியுள்ளனர்.

தற்போதைய பல பரிமாண நெருக்கடி அவர்களின் வாழ்வாதாரத் ஸ்ரீதுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது மற்றும் தேசிய உணவு முறையை சீர்குலைக்கிறது. உரங்கள் மற்றும் பிற அத்தியாவசிய உற்பத்தி உள்ளீடுகள் கிடைக்காததால், 2021ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து விவசாய உற்பத்தி கீழ்நோக்கிய போக்கில் உள்ளது. கால்நடை பராமரிப் பாளர்க ஸ்ரீளால் தீவனம் மற்றும் அடிப் படை கால்நடை பொருட்களை அணுக முடிய வில்லை. மேலும், மீனவர்கள் மோட் டார் பொருத்தப்பட்ட படகு களுக்கான எரிபொருளை பெற முடியா மல் தவிக் கின்றனர்.

இதன் விளைவாக, உள்ளூர் சந்தை களில் உணவு விநியோகம் சுருங்கி வரு கிறது மற்றும் உணவு பணவீக்கம் உயர்ந்து, ஜூலை 2022 இல் 90 சத வீதத்தை எட்டுகிறது. மேலும், ஒவ் வொரு பத்தில் நான்கு குடும்பங்கள் தங்கள் வருமானத்தில் குறைப்பை அனு பவித்துள்ளனர். மேலும், ஒவ்வொரு இரண்டு குடும்பங்களிலும் ஒருவர் தற்போது எதிர்மறையான சமாளிக்கும் வழிமுறைகளை நம்பியுள்ளனர்.

இலங்கை விவசாயிகள் மற்றும் அவர்களது சமூகங்களுக்கு ஆதரவளிப் பதற்கான வாய்ப்புகள் குறுகிய கால எல்லையில் உள்ளன. விவசாயிகளுக்கு தரமான விதைகள், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டால், அவர் கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பாது காக்கவும், அவர்களின் சமூகங்களுக்கு உணவளிக்கவும் உதவும்.

மிகவும் பாதிக்கப்படக்கூடிய விவசாயிகள், கால்நடை பராமரிப்பா ளர்கள் மற்றும் மீனவர்களுக்கு அவர்க ளின் உற்பத்திச் சொத்துக்களை மீட்டெ டுப்பதற்கும், விரைவாக மீட்கப்படுவ தற்கும் அவர்களுக்கு பண உதவி வழங்கு வது மிகவும் முக்கியமானது. (ஐ)

# புதிய காற்றழுத்த மண்டலம் இலங்கை ஊடாக கடக்கலாம்!

### விரிவுரையாளர் பிரதீபராஜா

யாழ்ப்பாணம், டிசெ. 20

வங்காள விரிகுடாவில் புதிதாக உரு வாகி வரும் காற்றழுத்த தாழ்வு மண்ட லம் இலங்கையின் மத்திய பகுதி ஊடாக நகரும் என்று யாழ். பல்கலைக்கழக புவி யியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்கே உருவாகிய தாழமுக்கம் மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து வருகின்றது. இது நாளை மறு தினம் நன்கமைந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறும் வாய்ப் புள்ளது. இது எதிர்வரும் 23 அல்லது 24ஆம் திகதி நாட்டின் மத்திய பகுதியி னூடாக (தற்போதைய நிலையில்) கரை யைக் கடக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

உண்மையில் இந்த தாழமுக்கத்தின் நகர்வு பாதை தொடர்பாக உறுதியாக எதனையும் தற்போது கூறமுடியாது. எனினும், தற்போதைய நிலையில் இது இலங்கை ஊடாகவே நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தாழமுக்கம் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைத்து கொண்டிருக்கும் மழை எதிர்வரும் 25ஆம் திகதி வரை தொடரும் வாய்ப்புள்ளது.

எனினும், நாளை முதல் 24ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத் தின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது கனமானது முதல் மிகக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

நாளை மறுதினம் முதல் கரையோரப் பகுதிகளில் மணிக்கு 50 கி.மீ. முதல் 65 கி.மீ. வரையான வேகத்தில் காற்று வீசும் வாய்ப்புள்ளது.

இதேவேளை, வடக்கு, கிழக்கு, வட மத்திய, ஊவா, மற்றும் தென் மாகாணத் தின் பல பகுதிகளுக்கும் நாளுக்கான அதிகூடிய வெப்பநிலை குறைவாக பதிவு செய்யப்படும் என்பதனால் குளிரான வானிலை சில நாட்களுக்கு தொடரும்.

வடகீழ்ப் பருவக்காற்று மழைவீழ்ச் சியை பொறுத்தவரை 2023 ஜனவரி 20 வரை தொடர வாய்ப்புள்ளது. இக்காலப் பகுதியில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியே எங்கள் மேற்பரப்பு நீர்நிலைகள் முழுக் கொள்ளளவை எட்ட உதவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## போதையில்...

சம்பவத்தில் 3 பிள்ளைகளின் தாயான ஜெயக்குமார் புவனேஸ்வரி (வயது -28) என்பவரே உயிரிழந்தார்.

வயலில் உள்ள வீட்டில் காவல் கட மையில் இருந்தவேளை, கணவனும் மனைவியும் மதுபானம் அருந்தியுள்ள னர். இதன்போது இருவரிடையே ஏற் பட்ட வாய்த்தர்க்கம் சண்டையாக மாறி யது.

இதையடுத்து கணவன், மண்வெட்டிப் பிடியால் மனைவியை தாக்கியுள் ளார். இதில் சம்பவ இடத்திலேயே அந்தப் பெண் விழுந்து உயிரிழந்தார்.

கரடியனாறு பொலிஸார் சந்தேக நபரை கைது செய்ததுடன், மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்ற னர். (ஐ)

## யாழில்...

இறாத்தல் பாணின் விலையை அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் 10 ரூபாயால் குறைத்தது. இந்நிலையில், யாழ்ப்பா ணத்தில் பாணின் விலையில் மாற்றம் ஏற்படாது என்று முன்னர் அறிவிக்கப் பட்டது.

எனினும், நேற்று யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம், யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் என்பன கூடி விலை குறைப்பு தொடர்பாக ஆராய்ந்தன.

இதைத் தொடர்ந்து, கோதுமை மாவின் விலையை விலைக்கழிவில் தொடர்ச்சியாக தருவதாக பிறீமா நிறு வனம் உறுதியளித்ததால் 10 ரூபாய் குறைக்கப்படுகிறது என்று தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை, வரும் 30 ஆம் திகதி யின் பின்னர் பாணின் விலை மேலும் குறைக்கப்பட வாய்ப்புள்ளது என்று யாழ். மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்க தலைவர் க.குண ரட்ணம் தெரிவித்துள்ளார். (ஐ)

## தீர்வு முயற்சிகளை...

கொழும்பிலுள்ள சம்பந்தனின் இல்லத் துக்கு சென்று அவரை சந்தித்துப் பேசி னார். இந்த சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப் பினர் எம். ஏ. சுமந்திரனும் பங்கேற்றிருந் தார்.

இதன்போது, நாட்டில் நிலவும் இனப் பிரச்னையையும் - பொருளாதார நெருக்கடியையும் தீர்ப்பதற்கு இதுவே பொருத்தமான நேரம் என்று சொல் ஹெய்மிடம் சம்பந்தன் வலியுறுத்தி னார். அத்துடன், அரசியல் தீர்வு சமத்து வம் நிறைந்ததாக அமைய வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் கூறியுள் ளார்.

இதற்கு பதிலளித்த எரிக் சொல் ஹெய்ம், இதனை (தீர்வு பேச்சு - பொரு ளாதார நெருக்கடி தீர்வு) பாதுகாப்ப தற்கு தேவையான அனைத்து முயற்சிக ளையும் மேற்கொள்வேன் என்று இதன்போது அவரிடம் உறுதியளித்தார்.

இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்த சுமந்திரன் எம். பி., அரசாங்கம் தொடர்ந்தும் நீடிப்பதற்கு மக்கள் ஆணை தேவை. மக்களின் எதிர்ப்பு போராட்டத்தின் மூலம் இந்த அர சாங்கம் மக்கள் ஆணையை இழந்து விட்டது. ஜனாதிபதி, பிரதமர் ஆகி யோர் மாற்றப்பட்டாலும்கூட முன்னர் ஆட்சியில் இருந்த கட்சியே ஆளும் கட்சியாக உள்ளது. எனவே, மக்கள் ஆணையை பெற்ற அரசாங்கம் அமைய பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். பாராளுமன்றத்தை கலைக் கும் அதிகாரம் அடுத்த ஆண்டு ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவின் வசமாகி விடும். எனவே, அவர் பாராளுமன் றத்தை கலைத்து தேர்தலை நடத்த வேண்டும். ஆனால், அதற்கு முன்னதாக மாகாண சபைகளுக்கான தேர்தலையும், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்த லையும் நடத்த வேண்டும்” என்று கூறினார்.

மேலும், இந்தச் சந்திப்பில், ஜனாதி பதியின் அழைப்பின் பேரில் இனப் பிரச்னை தீர்வுக்கான பேச்சு - சர்வகட்சி மாநாடு தொடர்பில் எரிக் சொல் ஹெய்ம் அதிகம் கேட்டறிந்து கொண் டார். மேலும், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு முன்வைக்கும் தீர்வு திட்டம், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலவும் பிரச்னைகள் - முன்னெடுக்கப் படும் - மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள், விடுவிக்கப் பட்ட அரசியல் கைதிகள், சிறையில் இருக்கும் அரசியல் கைதிகள் தொடர் பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

இதேவேளை, நேற்றைய தினம் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வையும் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்துப் பேசினார்.

சஜித் பிரேமதாஸவுடனான சந்திப் பில் புதுப்பிக்கத்தக்க புரட்சியில் இலங் கைக்கான வாய்ப்புகள் குறித்து விவாதித் தாக சொல்ஹெய்ம் தனது சமூகவலை தளத்தில் தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தொடர்ந்தும் நான் விளையாடுவேன்!

## மெஸ்ஸி அறிவிப்பு



டோஹா, டிசெ. 20

உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டி 2022 சம்பியன் பட்டம் வென்ற பின்னர் பேசிய ஆர்ஜென்ரீன வீரர் லயனல் மெஸ்ஸி, இப்போதைக்கு ஓய்வு பெறுவதில்லை என்றும் தொடர்ந்து சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிகளில் விளையாடப் போகிறார் எனவும் அறிவித்துள்ளார்.

கட்டாரில் நடந்த உதைபந்தாட்டத் உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனா - பிரான்ஸ் அணிகள் மோதின. இதில், சமநிலை தவிர்ப்பு உதை மூலம் பிரான்ஸ் அணியை தோற்கடித்து சம்பியன் பட்டத்தை வென்றது ஆர்ஜென்ரீனா. இந்த போட்டிதான் மெஸ்ஸி விளையாடும் கடைசி போட்டி என்று கூறப்பட்டது.

ஆனால், போட்டியில் வெற்றி பெற்ற பின்னர் பேசிய மெஸ்ஸி, "இதை நம்பவே முடியவில்லை. ஆனாலும் எனக்குத் தெரியும் இறைவன் இந்தக் கிண்ணத்தை எனக்கு அளிப்பார் என்று. இதில், நான் உறுதியாக இருந்தேன். இந்த நாள் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கும் நாள். இந்த கனவை நான் நீண்ட நாள் கொண்டிருந்தேன். நான் எனது பயணத்தை ஓர் உலகக் கிண்ணத்துடன் நிறைவு செய்யவே ஆசைப்பட்டேன். ஆனால், இப்போது அதை முடித்துக் கொள்ளப் போவதில்லை என்று முடிவு செய்கிறேன். நான் இனியும் தேசிய அணிக்காக விளையடுவேன். உலகக் கிண்ண சம்பியன்ஷிப் போட்டிகளில் ஆர்ஜென்ரீன ஜேர்சியுடன் விளையாடவே நான் விரும்புகிறேன்" என்று கூறியுள்ளார்.

முன்னதாக மெஸ்ஸி, "எனது கடைசி ஆட்டத்தை இறுதிப் போட்டியில் விளையாடி எனது உலகக் கிண்ணப் பயணத்தை முடிக்க முடிந்ததில் நான் மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறேன். அடுத்த உதைபந்தாட்டப் போட்டிக்கு இன்னும் நிறைய ஆண்டுகள் உள்ளன. அதில் விளையாடுவேன் என்று நான் நினைக்கவில்லை. அதனால் இந்தப் போட்டியில் எனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி முடிக்க நினைக்கிறேன்" என்று கூறியிருந்தார். (ஐ)



# இந்தியாவுடனான தொடர் கேன் வில்லியம்சன் இல்லை!

வெலிங்டன், டிசெ. 20

இந்திய அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் கேன் வில்லியம்சன் இடம்பெறவில்லை.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செல்லும் நியூசிலாந்து அணி இந்திய அணிக்கு எதிராக 3 இருபது - 20 போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது.

இந்த தொடர் ஜனவரி 18ஆம் திகதி ஹைதராபாத்தில் தொடங்குகிறது. இந்தியாவுக்கு செல்லும் முன்னர் நியூசிலாந்து அணி பாகிஸ்தான் செல்கிறது. அங்கு அந்த அணி 2 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடுகிறது.

இந்நிலையில், இந்த இரு தொடருக்குமான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இரு தொடருக்கும் வெவ்வேறு அணித் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சமீபத்தில் நியூசிலாந்தின் டெஸ்ட் அணியின் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகிய கேன் வில்லியம்சன் பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரில் மட்டும் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய அணிக்கு எதிரான தொடரில் நியூசிலாந்து அணியின் தலைமைப் பொறுப்பை ரொம் லதாம் ஏற்றுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் அணி - ரொம் லதாம் (அணித் தலைவர்), மார்க் சாம்ப்மென், லக்கி பெர்குசன், டேரில் மிட்செல், மிட்செல் சாண்ட்னர், பின் அலன், டெவன் கொன்வே, மேட் ஹென்றி, ஹென்றி நிக்கோல்ஸ், ஹென்றி சிப்லே, மைக்கெல் பிரேஸ்வெல், ஜேக்கப் டப்பி, அடம் மில்னே, கிளென் பிலிப்ஸ், இஷ் சோதி.

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடர் - கேன் வில்லியம்சன் (அணித் தலைவர் ), மைக்கல் பிரேஸ்வெல், மேட் ஹென்றி, ஹென்றி நிகோல்ஸ், ஹென்றி சிப்லே, ரொம் லதாம், டெவன் கொன்வே, அடம் மில்னே, க்ளென் பிலிப்ஸ், இஷ் சோதி, பின் அலன், லக்கி பெர்குசன், டேரில் மிட்செல், மிட்செல் சாண்ட்னெர், டிம் சவுதி.

# கறுப்பு அங்கியுடன் மெஸ்ஸி கிண்ணத்தை வாங்கியமை ஏன்?



டோஹா, டிசெ. 20

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி நிகழ்வில் கறுப்பு நிற அங்கி ஒன்றை ஆர்ஜென்ரீன வீரர் மெஸ்ஸிக்கு கட்டார் மன்னர் அணி வித்தமை உலக அளவில் பேசும்பொருளானது.

22ஆவது உலகக் கிண்ணத் தொடரில் ஆர்ஜென்ரீனா சம்பியன் பட்டம் வென்றது. 36 வருடங்களுக்குப் பிறகு தற்போதுதான் ஆர்ஜென்ரீனா வாகை சூடியுள்ளது. அந்த அணி உலகக் கிண்ணத்தை வெல்வது இது 3ஆவது முறையாகும். ஆர்ஜென்ரீனாவின் வெற்றியை உலகம் முழுவதிலும் உள்ள மெஸ்ஸி ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

இதனிடையே, கிண்ணம் வழங்கும் நிகழ்வில், கறுப்பு நிற அங்கி போன்ற ஆடையை கட்டார் மன்னர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானி, ஆர்ஜென்ரீனா அணித் தலைவர் லயனல் மெஸ்ஸிக்கு அணிவித்தார். இந்த ஆடையை அணிந்துதான் உலகக் கிண்ணத்தை மெஸ்ஸி பெற்றார்.

இந்த நிலையில், பலரும் இந்த ஆடை குறித்தும் கேள்வி எழுப்பி இருந்தனர். ஏன் ஆர்ஜென்ரீனா ஆடையை அணிந்து மெஸ்ஸி உலகக் கிண்ணத்தைப் பெற வில்லை என்று பலரும் குழப்பி இருந்தனர்.

இந்தக் குழப்பத்துக்கு இப்போது தெளிவு கிடைத்துள்ளது. மெஸ்ஸிக்கு கட்டார் மன்னர் அணிவித்த அந்த அங்கியை 'அரபில் பிஷ்ட்' என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆடை போருக்கு செல்லும் அரபு வீரர்கள் வெற்றிக்கு பின் அணிவார்கள் (இந்த ஆடை ஒட்டகத்தின் முடி மற்றும் ஆட்டுத் தோலால் செய் யப்படுவது) . அதன் பொருட்டே மரியாதைக்குரிய வகையில் இதனை மெஸ்ஸிக்கு கட்டார் மன்னர் அணிவித்துள்ளார். இந்த வகையான ஆடை அரபு நாடுகளின் பாரம்பரியமாக கருதப்படுகிறது. (ஐ)

# ஹாரி புரூக் அபார சதம் இங்கிலாந்து முன்னிலை!

கராச்சி, டிசெ. 20

ஹாரி புரூக்கின் சதத்தின் உதவியுடன் இங்கிலாந்து அணி பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முன்னிலை பெற்றுள்ளது.

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கராச்சியில் சனிக்கிழமை தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத் தாடிய பாகிஸ்தான் 304 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந் தது. பின்னர் தனது முதல் இனிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்க்கு 7 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

2ஆவது நாளான நேற்று முன்தினம் தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து அணியில் ஹாரி புரூக் சதமும் (111 ஓட்டங்கள், 150 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்), ஒல்லி போப் (51 ஓட்டங்கள்), விக்கெட் காப்பாளர் பென் போக்ஸ் (64 ஓட்டங்கள்) ஆகியோர் அரைச்சதமும் எடுத்து அணியின் முன்னிலைக்கு உதவினர்.

இந்த தொடரில் ஹாரி புரூக் விளாசிய 3ஆவது சதம் இதுவாகும். முன்னாள் அணித் தலைவர் ஜோ ரூட் டக்-அவுட் ஆனார். இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 81.4 ஓவர்களில் 354 ஓட்டங்களுக்கு சகல விக்கெட் களையும் இழந்து 50 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர்கள் அப்ரார் அகமது, நமன் அலி தலா 4 விக்கெட்களை எடுத்தனர். அடுத்து 50 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸ ஆடிய பாகிஸ்தான் ஆட்டம் முடிவில் விக்கெட் இழப்பின்றி 21 ஓட்டங்கள் எடுத்துள்ளது.



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.